உ



ஆண்டிகேணி ஐயனாரின்

# அற்புத வரலாறும் ஆண்டிமுனிவர் புராணமும்

(பின்னிணைப்பு :- திருவாசகச்செழும்பொருட் சுருக்கம்)

ஆக்கம்:- சி.பொன்னம்பலம் (B.A.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டிகேணி ஐயனின் அற்புத வரலாறும் ஆண்டி முனிவர் புராணமும்

(பின்னிணைப்பு திருவாசகச் செழும்பொருட் சுருக்கம்)

ஆக்கம்

கவிஞர். சி. பொன்னம்பலம் B.A

2002 மார்கழி 15ம் நாள்

விலை : ரூபா 70.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துரை
# இந்நூல் பேணு சிவநெறி காட்டும்

பொன்பெருகு காரைநகர்ப் பதியின்கண்ணே
புகழ்பெருகும் ஈழத்துச் சிதம் பரத்தான்
முன்புணரும் வரலாற்றை எண்ணும்போதில்
முதல்வந்தார் ஆண்டிகேணி ஐயன் என்ற
இன்பமிகும் கதையெல்லாம் வெளிப்படுத்தி
இறையன்பு மிகுபொன்னம் பலமாம் அன்பன்
தன்பெருகும் ஆர்வத்தால் ஐயனாரின்
சரிதையெல்லாம் தந்தார்பால் தேனைப் போலே

அருளாண்டி முனிவர்தரு கேணிக்குள்ளே
ஐயனார் வந்துதித்துப் போதிநீழல்
பொருளோங்கு கோயில்கொண் டருகேதில்லைப்
பொதுநடத்தான் சிவலிங்கம் பயின்றவாறும்
மருளோங்கு மக்களுக்குத் துன்பம்நீக்கி
மட்டில்லா அற்புதங்கள் நிகழ்ந்தவாற்றைத்
தெருளோங்கு கற்பகமாய்த் திரட்டித்தந்தார்
சிறந்தகவி மணிபொன்னம் பலமாம்செம்மல்

சீராண்டி முனிவரது புராணங்கூறி
திகழ்ஐய னாரினற் புதங்கள்கூறி
பாரெல்லாம் சிவம்பரப்பும் இந்தநன்னூல்
படிப்பவர்க்குப் பேரின்பப் பாதைகாட்டும்;
நீரெல்லாம் சடைக்கணிந்த தில்லைக்கூத்தன்
நிகழ்ச்சியுடன் ஐயனார் பெருமைகாட்டும்;
பேரறிஞர் இந்நூலைக் கற்றுப் போற்றி
பேணுசிவ நெறிமலரச் செய்வார் வாழி.

அருட்கவி
**சீ. விநாசித்தம்பி M.A**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

***பேராசிரியர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ண ஐயர்,***
***இந்துநாகரிகப் பேராசிரியர்***
***கலைப்பீடாதிபதி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்***

யாழ்ப்பாணத்தில் காரைநகரில் அமைந்துள்ள ஈழத்துச் சிதம்பரம் என்றழைக்கப்படும் சிவாலயத்தில் தமிழகத்தில் உள்ள சிறந்த தலப்பெருமைபெற்ற சிதம்பரத்தின் ஐதீகங்களுக்கமைய வழிபாட்டு மரபுகள் நடந்தேறி வருகின்றன. இத்தலத்தின் ஆதிமூர்த்தியாக விளங்கும் ஆண்டி கேணி ஐயனாரின் அற்புத வரலாற்றினையும் திண்ணபுரச் சுந்தரேசப் பெருமானின் பெருமைகளையும் இத்தலத்தின் எழுச்சிக்குக் காரணகர்த்தராக விளங்கிய பெரியார் ஆண்டியின் புராணத்தையும் தாங்கியதாக இந்நூல் வெளிவருகின்றது. இதன் ஆசிரியர் இளைப்பாறிய அதிபர் திரு. சி. பொன்னப்பலம் அவர்களாவர். இவர் திண்ணபுரத் திருச்சதகம், சுந்தரக் கவிமலர், மடத்துக்கரை அம்பாள் பேரில் ஊஞ்சல் ஆகிய ஆக்கங்களின் வழி தமது சமய அனுபவத்தினை வளர்த்துக் கொண்டவராவர். ஆண்டிகேணி ஐயனார், சுந்தரேசப்பெருமான் மீதும் பெரியார் ஆண்டியின் மீதும் கொண்ட அளவற்ற அன்பு காரணமாக ஆசிரியர் இந்நூலினை ஆக்கி சைவ உலகுக்கு உவந்தளித்துள்ளார்.

ஈழத்துச் சிதம்பர தலப்பெருமை பற்றியறிவதற்குப் பல நூல்கள் எழுந்துள்ளன. காரைநகர் கார்த்திகேயப் புலவரின் திண்ணபுர அந்தாதி, கலாநிதி பண்டிதர் சிவஸ்ரீ. க. வைத்தீசுவரக்குருக்கள் எழுதிய ஈழத்துச் சிதம்பர புராணச் சுருக்கம் நவாலியூர் புலவர்மணி சோ. இளமுருகனார் ஆக்கிய திருத்திண்ணபுரச் சுந்தரேசன் புராணம் என்னும் ஈழத்துச் சிதம்பரபுராணம் (1972) போன்ற நூல்களின் வரிசையில் ஆசிரியரது இந்நூலும் இணைந்து இத்தலப் பெருமையைப் பேசுகின்றது. இத்தலத்தின் சுற்றாடலில் உள்ள இடங்களின் பெருமைகளை இத்தலத்தோடு இணைத்து விளக்கப் பட்டவகையில் இந்நூல் சிறப்படைகின்றது. துர்வாச சாகரம் என்ற



தீர்த்தக்கரை, தனிப்பனையடியும் கத்தரிப்படப்பும், மாணிக்கவாசகர் மடம், சப்பறத்தடி, வடபத்திரகாளி ஆலயம், தினகரன்பிட்டி, சோனக பங்கு, சாந்தி வைரவர், எல்லைமானப் பந்தலடி, தலவிருட்சம், ஐயனார் திருவுருவம் வெளிவந்த ஆண்டி கேணி ஆகிய இடங்களோடு தொடர்புடைய ஐதீகங்களும் சமயஞ் சார்ந்த செய்திகளும் இந்நூலில் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. இச்சிவாலயப் பெருமையும் ஐயனாரது அற்புதங்களும் இந்நூலில் சிறப்பாக விளக்கப்பட்டுள்ளன.

இவ்வாலயத் தோற்றத்தோடு தொடர்புடைய தொண்டர் ஆண்டி முனிவரின் புராணம் எனப்படும் பெரியார் ஆண்டி புராணமும் கவிதை வடிவில் இந்நூலில் இடம்பெறுகின்றது. பாயிரம், தெய்வங்களுக்குரிய துதிப்பாடல்கள் ஆகியவற்றுடன் புராணம் அமைந்ததற்குரிய காரணத்தையும் ஆசிரியர் குறிப்பிடுகின்றார்.

ஆண்டியர் செய்த திருப்பணியை
அருந்தமிழ் உலகிற் கெல்லாம்
வேண்டியே விளம்பிக காட்ட
விரும்பினேன் புராணமாக.

என ஆசிரியர் தெளிவுபடக் கூறுகின்றார். நாட்டுவளப்படலம், நகர் வளப்படலம், ஆண்டியார் தோற்றப்படலம், ஆண்டியார் பணிபுரிச் சருக்கம், ஆண்டிகேணி ஐயனார் சருக்கம், ஆண்டி, அம்பலவிமுருகன் ஆகிய இருவர் சருக்கம், ஆண்டியார் அமரத்துவ சருக்கம், ஐயனார் வாழ்த்தியச் சருச்கம், நூல் சமர்ப்பணம் வாழ்த்து போன்ற தலைப்புக்களில் எளிமையான கவிதை நடையில் ஆலயத் தாபகரது வரலாற்றினை ஆசிரியர் விளக்கியுள்ளார்.

இவ்வாலயத்தில் மணிவாசகர் சபை பன்னெடுங்காலமாகத் திருவெம்பாவைக் காலத்தில் திருவாசகப் பெருமையை உலகறியச் செய்து வந்துள்ளமை யாவரும் அறிந்ததே. கலாநிதி பண்டிதர் சிவஸ்ரீ. க. வைத்தீசுவரக்குருக்கள் இதற்கு மூலகர்த்தராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்கியவர். அம்மரபைப் போற்றும் வகையில் திருவாசகச் செழும் பொருள் சருக்கம் என்ற தலைப்பில் இந்நூலின் நிறைவாக திருவாசகப் பெருமையை ஆசிரியர் விதந்து கூறுகின்றார். உரைநடையிலும் கவிதை நடையிலும் ஆசிரியர் திண்ணபுரத்துச் சிறப்புக்களை எதிர்கால இளந்தலைமுறையினரின் நன்மை கருதி இந்நூலின் வழி எடுத்துக்கூறி இருப்பது பாராட்டிற்குரியது. எமது பிரதேச ஆலயங்களின் சமய மரபுகளை அறிய இந்நூல் துணை செய்கின்றது. ஆண்டிகேணி ஐயனார், திண்ணபுரச் சுந்தரேசர் புகழ் பாடும் இந்நூலைச் சைவ உலகம் உவந்து வரவேற்கும் என்பதில் ஐயமில்லை. மேலும் இறைவனையும் அவர்தம் தொண்டரையும் இணைத்துக் கூறும் தல வரலாறாக இந்நூல் பரிணமிக்கின்றது. இந்நூலில் ஆசிரியர் ஆங்காங்கே ஐயத்துடன் தெரிவித்துள்ள சில விடயங்கள் மேலும் ஆழ்ந்த ஆய்வுக்குரியன என்பதும் இங்கு குறிப்பிடற்பாலது.

இந்நூலினை ஆக்கி வெளியிடும் திரு. சி. பொன்னம்பலம் அவர்கள் மேலும் இது போன்ற பல சமயக் கைங்கரியங்களில் ஈடுபட்டு சமயப்பணியாற்ற அவருக்கு சகல நலன்களையும் அருளும் வண்ணம் ஆண்டிகேணி ஐயனாரினதும் திண்ணபுரத்துச் சுந்தரேசப் பெருமானினதும் திருவருள் பொலிக என வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றேன். இந்நூலின் வெளியீட்டுக்குத் துணைநின்ற ஏனைய அன்பர்களுக்கும் எம் பெருமான் திருவருள் கிட்டுவதாகுக!

***'மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்'***

**பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர்**

திருநெல்வேலி
10.12.2002



***தத்துவ கலாநிதி***
***சிவத்தமிழ் வித்தகர் சிவத்திரு. க. வைத்தீசுவரக்குருக்கள் அவர்கள்***
***வழங்கிய***

# வாழ்த்துரை

திண்ணபுரம் சுந்தரேசுவரர் ஆலயம் தோன்றுவதற்கு மூலகாரணமாய் இருந்தவர் ஆண்டி என்னும் பெரியார். அவர் சிவன் கோவில் இரண்டாம் வீதியில் காணப்படும் வைரவர் கோவிலைத் தாபித்து வணங்கி வரும் நாளில் ஆலயத்தின் தென்கிழக்குத் திசையில் தோன்றிய பேரொளியைக் கண்டார்.

அந்த ஒளி தோன்றிய இடத்தில் ஒரு கேணியை தோண்டினார். அதில் கண்டு எடுக்கப்பட்டதே ஐயனார் விக்கிரகம் ஆகும். அதனால் அதற்கு "ஆண்டிகேணி ஐயனார்" எனக் காரணப் பெயர் சூட்டினார்கள்.

இந்த அற்புத வரலாற்றினை வசன நடையிலும் பாவடிவிலும் "ஆண்டிகேணி ஐயன் அற்புத வரலாறும் ஆண்டி முனிவர் புராணமும்" என்னும் இந்த நூலினை எழுதி தந்துள்ளார் காரைநகர் கவிஞர் சி. பொன்னம்பலம் அவர்கள்.

கவிஞர் அவர்கள் சிறுவயதில் இருந்தே இந்த ஆலயத்துடன் நெருங்கிப் பழகியவர். அவரது மூதாதையர்கள் கோவிலின் அயலில் வாழ்ந்தவர்கள். அவர்களிடம் கேட்டறிந்த வற்றை இந்த நூலில் சொல்லியிருக்கின்றார்.

இந்த ஆலயம் தொடர்பாக வந்த நூல்களில் கூறப்படாத வற்றை விளக்கிக் கூறி உள்ளார். சரித்திர ஆய்வு, சமய ஆய்வு செய்வோருக்கு இந்த நூல் பிரயோசனப்படும்.

கவிஞரின் பணிகள் சிறந்து வளர எல்லாம்வல்ல ஆண்டி கேணி ஐயனாரை வணங்கி வாழ்த்துவோமாக!

**க. வைத்தீசுவரக்குருக்கள்**

**காரைநகர்.**
09.12.2002



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈழத்துச் சிதம்பர தேவஸ்தானம் வழங்கும்

# வாழ்த்துரை

ஆண்டிக்கேணி ஐயனார் அற்புத மூர்த்தி. அவரின் ஆதார பூர்வமான வரலாற்றினைக் காட்டுவது ஆண்டி கேணி ஐயனின் அற்புத வரலாறு என்னும் நூல். வரலாற்றுத் தன்மை கொண்டது.

ஆண்டி முனிவர் அம்பலவிமுருகர் தம் வரலாற்றினை விளக்குவது ஆண்டி முனிவர் புராணம். இப்புராணத்தின் மூலம் இருவர் தம் வரலாறு நிலைத்து நிற்கும் என்பதில் ஐயமில்லை.

திருவாசகச் செழும்பொருட் சுருக்கம் யாவற்றிற்கும் மகுடமிட்டதுபோல் அமைகிறது.

*வாழ்க வளர்க தமிழ் சைவப் பணிகள்.*

2002 மார்கழித்திங்கள்

**ஆ. அம்பலவிமுருகன்**
**மு. சுந்தரலிங்கம்**
***அறங்காவலர்***



## கடவுள் வணக்கம்

ஊனின்றி உறக்கமின்றி உனதடிகள் போற்றி எனை
நான் உனது பணி செய்ய நம்மன்னை அருள் தந்தாள்
வான் பொழியும் சோலைசூழ வளர் காரைச் சிதம்பரத்தின்
தேன் சொட்டும் தமிட்குமரா திருவடியே சரணமே.

# ஐயனார்

ஐயனாரை உலகெங்கும் காவல் தெய்வமாகவும் ஆகம நெறி போற்றும் கடவுளாகவும் காண்கிறோம். விநாயகரை மரத்தடியிலும் கேணிக்கரை முதலியவற்றிலும் மஞ்சள், சந்தனம் முதலியவற்றிலும் வழிபடுகிறோம். முருகனும் ஆகமமுறைசாரா வழிபாடுகட்கும் உட்பட்டு விளங்குகிறார். இம்மூவரும் சிவபரம்பொருளின் மைந்தர்கள் எனக்கொண்டாடப்படுபவர். இந்நிலையில் ஐயனார் சிறு தெய்வமாக காவல் தெய்வமாகக் கொள்வதற்கு ஆதாரமில்லை. சிவனே பல்வேறு செயற்பாடுகளை நிலை நிறுத்த மைந்தர்கள் என ஏத்தும் வண்ணம் தனது சக்திகளை பல்வேறு வடிவங்களில் வழிப்படுத்தினார் என்பர்.

இந்நிலையில் தான் ஈசன் மைந்தன் ஐயனாகும். "ஒருவன் பல பேருளன்" என்பதற்கேற்ப ஐயனாரும் பல நாமங்களால் அழைக்கப்படுகிறான். இணையதம்பி என்பபடுவது ஐயனாரையே என்பது சிலர் கருத்தாகும். காவல் தெய்வமாகக் கொண்டாடுவதும் பூசலாரின் மனக்கோயில் அமைப்பினை ஒக்குமெனலாம். ஆகமங்களில் ஐயனாரைப் பற்றிய பல தகவல்கள் உள. ஆகமங்களிடையே வேறுபாடுகளும் உள.

எவ்வாறு முருகன் சிவனாரின் நெற்றிக் கண்ணிலிருந்து ஆறு பொறிகளாகிப் பின் அவ்வகையினால் தழுவப்பட்டு ஆறுமுகனார் ஆனார் அல்லவா. சிவனாரின் ஆண் சக்தி திருமால் எனக் கூறப்படுகிறது. அத்தகைய சக்திகளின் இணைப்பின் தோற்றமே ஐயனார் என்பர். இறைவன் பிச்சாடனர் வடிவந்தாங்கியும் திருமால் மோகினி வடிவம் தாங்கியும் இணைந்தபோதே ஐயனார் தோன்றினார். எனது புராண வரலாறுகள் எடுத்துக்காட்டும். எல்லா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகங்களையம் காக்கின்ற பெரும் பொறுப்பு சிவனாரால் ஐயனாருக்கு அருளப்பட்டதென்பர்.

கந்தபுராணத்தில் ஐயனார் அவதாரம் பற்றிக் கூறப்படுகிறது.

"மைக்கருங்கடல் மேனியும் வானுலாம்
செக்கர் மேனியும் செண்டுறு கையுமாய்
என்கிறது.

ஐயனார் பதினாறு வடிவு வேதங்கள் உடையவர் எனவும் கொள்ளுவர். மகாசாஸ்தா புவன சாஸ்தா என்பன சிலவாம். பதினாறு எட்டு இரண்டு கைகள் கொண்ட வடிவங்களாகவும் ஐயனார் ஆகிய சாஸ்தா விளங்குகிறார்.

சுப்பிர பேத ஆகமம் இரண்டு கை இரண்டு கால் கரிய மேனியில் பூனூலும் கொண்டு இரு மனைவியருடன் அமைந் துள்ளார் என்கிறது. பூர்வ காரணகமம் நீலப்பட்டாடை அணிந்து இரு கைகளை உடையவராய் யானையை வாகனமாய்க் கொண்டு விளங்குகின்றார் என்கிறது.

குதிரையும் ஐயனாரின் வாகனமாகக் கொள்ளப்படுகிறது. இடபமும் அவரின் வாகனமாகக் கொள்ளப்படும்.

சாஸ்தா என்ற பெயர் சமண மதத்துடன் தொடர்புடைய தெனக் கொள்வாருண்டு. ஐயனாருக்கு பூரணை புட்கலை என இரு சக்திகள் உண்டு. புட்கலையைப் பொற்கலை எனக் கூறுவாரும் உண்டு. ஐயனாரின் காவலராக மகாகாளர் விளங்குவர்.

ஐயப்பன் என்பது ஐயனாரையோம் என்பது ஏற்றுக் கொள்ளக் கூடியதே.

அகங்காரமற்ற நிலையில் பரசு ராமர் பதினெட்டு இடங்களில் பூரணைபுட்கலை சமேதராக ஐயனாரைப் பிரதிட்டை செய்துள்ளார் என்பர். முன்னர் சபரிமலையிலும் பூரணை புட்கலை சமேத ஐயனாராகவே விளங்கினர் என்பர். தர்மத்திற்கெல்லாம் தலைவன் அவனே.



# ஆண்டிக்கேணி ஐயனின் அற்புத வரலாறு

''என்னில் யாரும் எனக்கினியார் இலர்
என்னிலும் இனியா னொருவன் உளன்
என்னுளே உயிர்ப்பாய்புறம் போந்து புக்கு
என்னுளே நிற்கும் இன்னம்ப ர்ஈசனே"

(அப்பர்)

சமயங்கள் யாவும் தெய்வீக நெறியை ஆன்மீகத் தத்துவ கூறுகளை எடுத்துக் காட்டும் இச் சமயங்கள் யாவும் வாழ்க்கைக்கு வழிகாட்டுவதோடு இறைவன் உண்டு என்ற உறுதிப்பாட்டையும் எடுத்துக் காட்டுவன. இச் சமயங்களில் சில கடவுள் உண்டு என்பதை நிலை நாட்ட முயல்வதில்லை எனினும் அகிம்சை முதலிய நெறிகளைப் போற்றி மக்கள் வாழ்க்கைக்கு வழி காட்டுவது மாண்புடமையே.

இறைவன் எங்குமுண்டு என்றுமுண்டு என்பதை நாம் மறந்து விடலாகாது. இந் நிலையில் தான் ''ஆலயம் தானும் அரனெனத் தொழுமே" எனத் [illegible] எடுத்தியம்புகின்றார். கடவுளைப் பற்றிக் கூறாத சமயங்கள் கூட ஏதோ ஒரு வகையில் கடவுள் வழிபாட்டை நிகழ்த்தித்தான் வருகின்றன.

இந் நிலையில் தான் சைவ சமயத்தவரும் கடவுள் வழிபாட்டை நிகழ்த்தி வருகின்றனர். பொது மக்களுக்கு இறை வழிபாடாற்றுவதற்குச் சிறந்த இடம் ஆலயமே என்பது சைவசமய நூல்களின் துணிவாகும். எனவே ஆலயங்களை அமைத்தலைப் பெரும் பணியாகக் கொண்டனர் சைவர்கள்.

ஈழத்திலும் மேற்கு நாட்டவர் ஆட்சியும் ஆக்கிரமிப்பும் அஸ்தமித்த பின் ஆலயங்கள் புனரமைக்கப்பட்டு ஆலய வழிபாடும் புனர்ஜென்மம் எடுக்கலாயிற்று. மேற்கு நாட்டவர் (பறங்கிகள்) ஆட்சியின் போது வயிரவர் மற்றும் மூர்த்திகள் வழிபாடு பகிரங்கமாக நடை பெறுவதில்லை. என்பதை நாம் அறிவோம் வீட்டிற்கு வீடு சிற்றாலயங்கள் இரகசியமாக விளங்கின. இவ்வாறு விளங்கி வந்ததை செவி மூலம் வரலாற்று ஆதாரங்கள் மூலம் ஞாபகப்படுத்தலாம். இவ்வயிரவர் வழிபாட்டு முறைகள் இன்றும் இருக்கத்தான் செய்கின்றன. அன்னிய நாட்டவர் ஆட்சியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தில் எல்லா மூர்த்திகட்கும் வயிர சூலமே வழிபாட்டு உருவமாக அமைந்ததை நாம் மறுக்க முடியாது

இந்நிலையில் உபய சிதம்பரமான ஈழத்துச் சிதம்பரம் எனப் போற்றப்படும் காரைநகர் சிவன் கோவிலின் வரலாற்று வடிவங்கள் ஆராயத்தக்கன.

அரச மரத்தடியில் ஆரம்பித்து (இரண்டாம் வீதியிலுள்ள அரசமரம்) வைரவசூல வழிபாடாய் பின் ஐயனார் ஆலயமாகி சிவலிங்க தாபனத்தை தொடர்ந்து சிவாலயமாய் நடராஜவடிவப் பிரதிஷ்டையுடன் ஈழமாம்சிதம்பரம் எனப் போற்றப்படும் பெருமையுடன் உலக ஜீவராசிகட்கெல்லாம் ஓர் ஒளி விளக்காய் திகழ்கின்றது.

இவ்வாலயத்தில் எழுந்தருளி அருள் புரியும் ஐயனாரும் சிவனாரும் இணைபிரியாத தெய்வத் திருக்கோலங்கள். இருவரின் ஆலயங்கள் இணைந்த பேராலயமாகக் காரைநகர் சிவன் கோயில் விளங்குகின்றதென்பதை எவரும் மறுக்க முடியாது. கோபுர மென்றாலென்ன குடமுழுக்கு என்றாலென்ன உற்சவமென்றாலென்ன இரு மூர்த்தங்களுக்கும் ஒரே சிறப்புத் தான்.

காரைநகர் சிவன் கோயிலைப் பற்றி அநேக வரலாற்று நூல்கள் வெளி வந்துள்ளன. எழுத வேண்டுமென்பது அவசிய முமில்லை தேவையற்றதும் ஆகும் ஆனால் ஏதோ ஒரு சக்தி இந்நூலை எழுதுமாறு தூண்டிக் கொண்டிருக்கிறது. ''என் செயலால் யாதொன்றுமில்லை. உன் செயலே என உணரப் பெற்றேன்' என்ற நிலையில் தான் இந்நூல் எழுதப்படுகிறது. என்பதையும் அடியார்கள் தெளிந்து கொள்வார்களாக.

வாழ்க்கை என்ற சிக்கலில் உலக இன்பங்களில் இச்சைகளில் ஈடுபட்டிருக்கும் நாம் இதனை எழுதுவதற்கு இலாயக்கற்றவர்கள் என்பதை அறிவோம். எனினும் இதுவரை காரைநகர் சிவன் கோயிலைப் பற்றிய சில தகவல்கள் பலருக்குத் தெரியாத நிலையில் உள்ளன. அவற்றை வெளிப்படுத்தாது விட்டால் வருங்காலத்தில் பலருக்குத தெரியாமற் போகலாம் தெரியப்படுத்தாது விட்ட பாவமும் என்னைச் சாடும்.



''என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே'' என்ற திரு மூலர் வாக்கு என்னைத் தூண்டிக் கொண்டே இருக்கிறது. பெயர், புகழ் நாடாது இறைபணியில் ஈடுபடு அவன் புகழ்பாடு என்பதே இதன் பொருள் போலும்.

காரைநகர் சிவன் கோவில் எழுந்தருளி இருக்கும் ஐயனாரின் அற்புத வரலாற்றை எழுத வேண்டும் என்ற அவாதூண்டுகின்றது.

''ஆசை பற்றி அறையலுற்றேன்'' என்ற கம்பநாட்டாழ்வார் கூற்றுப்படி இதனைத் தொடர்கிறேன். இதுவரை வெளிவராத தகவல்களே இதில் பெரும்பாலும் அமையும் இச் செய்திகளை எல்லாம் கேட்டுச் சிந்திக்கின்ற போது நெஞ்சமது புல்லரிக்கின்றது.

''காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி'' நிற்கும் நிலையில் இந் நூல் தொடர்கிறது. ஆண்டி கேணியில் ஐயனார் திருவுருவில் பிரகாசிக்கின்ற அற்புதத் திருவருட் சக்தியே இதற்கு பொறுப்பாகும்.

காரைநகர் திண்ணபுரச் சிவன் கோயில் கிராமத்தின் ஈசாணப் பெருந் திசையில் பரந்து பட்ட பெரு வெளியில் அமைந்து சிறப்புடன் விளங்குகிறது. இது சிவாலயமாக விளங்கினாலும் எல்லாச் சிறப்புக்களும் ஐயனார் வாசலிலேயே ஆரம்பிக்கப்படும். பெருஞ் சாந்தி விழாவிலும் கூட ஐயனாருக்கே முதலில் தேங்காய் உடைத்து ஆரம்பிக்கப்படுகின்ற தென்பதை நாம் மறக்க கூடாது.

எனவே பொதுவாக உலகத்தோரதும் குறிப்பாக காரைநகர் மக்களினதும் கண்கண்ட தெய்வமாக ஆண்டிக்கேணி ஐயன் விளங்குகின்றான்.

''ஒருவன் பல பேருளன்'' என்பது ஆன்றோர் வாக்கு ''ஒரு நாமம் ஒருருவம் ஒன்றுமில்லார்க்கு ஆயிரம் திருநாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ''

என்பது மணிவாசகர் அருள்வாக்கு இறை ஒன்றே பலவாறு வழிபடப்படுகின்ற என்ற உண்மை காரைநகர் சிவன் கோவில் அமைப்பினையும் வழக்கங்களையும் கொண்டு தெளிதல் முடியும். சிவன் உற்சவத்தில் ஐயனாருக்கு நேர்த்தி இது வெல்லாம் இறை ஒன்றே என்பதைத் தான் எடுத்துக் காட்டுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அதுவும் உன்தன் விருப்பன்றே" என்பது திருவாசகம் ஆண்டி கேணி ஐயனின் அற்புத வரலாற்று விடயங்களை இறைவனே புலப்படுத்தி வழி நடத்து வானாக.

இவ்வாலயம் திருப்பணியின் தொடர் வளர்ச்சி அம்பலவி முருகனின் நோக்கம் நிறைவேறிக் கொண்டிருக்கின்றதைத் தெளிவு படுத்துகின்றது. மேலும் இப்பணிகள் தொடர்ந்து உலகப் பெருங் கோயிலான சிதம்பரத்தோடு ஒத்து விளங்கு மென்பது உறுதியான நம்பிக்கை.

காரைநகரின் ஈசானப் பெருவெளி அற்புதங்கள் நிறைந்த திருப் பூமி. அகந்தை கொண்டு அவ்விடத்தில் வாழுதல் என்பது இயலாத காரியம். இவற்றிற்கெல்லாம் மக்கள் தரும் விளக்கம் ஐயனார் தம் அருட்பாங்கே என்பதாகும்.

சவுக்கடி என உலகோர் அறிந்த தீர்த்தக்கரை தூம்பிற்பிட்டி (தூர்வில்) சோகை பங்கு, தனிப்பனையடி, கத்தரிப்படப்பு மடத்தடி, சப்பறத்தடி. வடபத்திரகாளி கோயில் ஆலய விருட்சம் தினகரன் பிட்டி கருக்கு வாச்சி வைரவர், எல்லை மானப்பந்தலடி, சிவன் ஐயனார் அருளாலயங்களும், சமாதிகளும், இன்னும் பிறவும் இப் பூமியின் பெருமைக்கு சான்றாகவும் அரளாட்சிக்கு இருப்பிடமாகவும் விளங்குகின்றன.

## துர்வாச சாகரம்

துர்வாச சாகரம் எனப்படும் (சவுக்கடி) தீர்த்தக்கரை வரலாற்றுப் பெருமை உடையது கோவளத்திற்கு கீழ்த் திசையில் அமைந்துள்ளது. கோவளம் மார்க்கோபோலோ காலத் துறைமுகமென அறிஞர்கள் கூறுவர். இத் தீர்த்தக் கரையில் தான் இறைவனும் இறைவியும் காட்சி கொடுத்து புனித நீராடி பக்தர் களையும் அங்கே புலனாட அருள் செய்து அவர் தம் வழிபாடு களை ஏற்றருளுகின்ற சமுத்திர தீர்த்தமாகும்.

இத் தீர்த்த சாகரத்தை அண்டியிருக்கின்ற தும்பில் அல்லது தூர்வில் அகத்தியர் என்பவர் இறைவளை நோக்கித் தவம் செய்து வழிபாடாற்றிய இடமாகும். தீர்த்தக் கரையும் தூம்பிலும்



ஒருங்கே அமைந்தவையாகும். (அகத்தியர் என்ற பெயரில் பலர் பல்வேறு காலங்களில் வாழ்ந்துள்ளனர்)

## தனிப்பனையடியும் கத்தரிப்படப்பும்

தனிப்பனையடியும் தெய்வீகத் தன்மையுடையதே இங்கு தான் ஐயனார் வேள்வியின் இறுதிக் கிரியையான மடைமாற்றல் என்பது நடைபெறும். அன்று எவரேனும் மடைமாற்றல் முடிந்த பின் அவ்விடத்திற்கோ அதற்கு அப்பாலோ கடலுக்கோ செல்வத்தில்லை. என்பது முன்னைய வழக்கு. ஐயனாரின் அற்புத தெய்வீகத் தன்மையை உதாசீனம் செய்யக் கூடாது என்ற தெய்வீகப் பயப்பாடும் இருக்கத்தான் செய்தது, செய்கிறது. இது அன்றைய சமூகம் ஏற்படுத்திய சமயக் கட்டுப்பாடு என்பதில் தவறில்லை இடப்பெயர்வின் பின் அங்கு மடைமாற்றல் இடம்பெறுவதில்லை. கத்தரிப் படப்பு சிவன் கோயிலுக்கு கிழக்குத் திசையில் கடற்கரையை அண்டிய உவர் நிலமாகும் அவற்றை நாட்களில் சிவன் கோயில் சூழலில் வாழ்க்கை நடாத்தியவர்கள் இங்கு தான் கத்தரி முதலிய காய்கறிகளை பயிரிட்டு தம்மைப் போசித்தனர். இது 1920க்கு முன் இடம்பெற்றதென்பர்.

***குறிப்பு:-*** சிவாச்சிரமத்திற்கு வடக்கே அற்றை நாள்முதல் காய்கறிச் செய்கை மேற்கொள்ளப்பட்டது. இன்றும் செய்கை பண்ணைக் கூடிய நன்னீர்ச் சூழலும் மண்ணும் அமைந்துள்ளன. கத்தரிப் படப்பு தற்போது உவர் நிலமாகி பயனற்று விளங்குகிறது.

### மாணிக்கவாசகர் மடம்

மாணிக்கவாசகர் மடமும் அதன் சூழலும் அடியார்கட்கு அன்னம் பாலிக்கும் பெருமை பெற்றது. வருங்காலத்தில் கட்டிட அமைப்புக்கள் பெருகி அமுத சுரபியாக விளங்கும் என்பதில் சந்தேகமில்லை.

### சப்பறத்தடி

ஆலயத்தின் ஈசான மூலையைச் சப்பறத்தடி என வழங்குவர் இவ்விடத்தில் தான் பெரிய சப்பறம் நிரந்தரமாகப் பேணிப் பாதுகாக்கப்படுகிறது. இங்கும் வைரவரின் அருளாட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபெறுகின்றதென முன்னோர் கூறுவர். தற்போது சப்பறத்திற்கு கிழக்குத் திசையில் நிரந்தர கொட்டகை உண்டு.

### வடபத்திரகாளி ஆலயம்

இது புராதன பெருமை வாய்ந்தது சிவனார் ஆலயத்திற்கு முற்பட்டதென கூறுவாருமுளர். சிவனாரின் கொடியேற்றத்திற்கு முன்பே கொடியேற்றமும், பொங்கல் பூசனையும் இடம்பெறும் இவ்வாலயத்தில் பச்சை அரிசிப் பொங்கலும், வாழைக்காய் கறியும், உகந்த நிவேதனமெனக் கொள்ளப்படுகின்றது. சிவனார் ஆலயம் போல் இங்கும் உப்பு நிவேதனத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை. நிவேதனம் பற்றி வட பத்திரகாளியே கனவில் கூறியதாக முன்னோர் கூறுவர். பொங்கலுக்கு முதல் எட்டுநாளும் அன்னம் நிவேதிப்பதில்லை.

### தினகரன் பிட்டி:

தினகரன் என்னும் அந்தணப் பெரியார் வழிபாடாற்றிப் போற்றிய இடமெனக் கூறுவர். இங்குள்ள ஆலமரமும் வைரவ வழிபாடும் தினகரன் காலத்ததென்பர். இவ் வைரவக் கடவுள் மகா அற்புதம் உடையவர் எனக் கொண்டாடுவர். இராக் காலங்களில் மானிட உருவிலும் நடமாடுவர் என முன்னோர் கூறுவர் ஆலமரம் ஏறக்குறைய 300 ஆண்டுகளை உடையது. அதற்கு முற்பட்டது எனவும் கூறலாம் வைகாசி மாத விசாக நட்சததிரத்தன்று இப் பெருமானுக்கு பெங்கல் பூசைகள் சிறப்பாக இடம்பெறும் பொங்கலுக்கு முதல் எட்டு நாளும் அன்னம் நிவேதிப்பதில்லை.

### சோனக பங்கு

இங்கு முன்னர் சோனகர் பெரிய மண் வீடுகளை அமைத்து சங்கு வியாபாரத்தில் ஈடுபட்டதாக முன்னோர் கூறியதாக அறிகிறோம். இது சோனகரால் சிவன் கோயிலுக்குத் தர்ம சாதனம் செய்யப்பட்டதெனக் கூறுவாரும் உளர். சண்முகத்தார் இந்தியாவில் இருந்து வரும் போது மரக்கலம் உடைந்து தத்தளித்து அதிராம் பேட்டையைச் சென்றடைந்தனர். அதிராம் பேட்டைச் சோனகரே இவர்களை மீட்டு வேண்டிய உதவிகளைச் செய்து காப்பாற்றினர். என்பர். இங்கு வந்து சங்கு குளித்தலில் ஈடுபட்டவர் அதிராம் பேட்டைச் சோனகராக அன்றேல் யாழ்ப்பாணச் சோனகராக அறியோம். கோயில் நிலத்தில் தான் வாழ்ந்தார்கள் என்பாருமுளர்.

### சாந்தி வைரவர்
### (கருக்கு வாச்சியடி வைரவர்)

இங்கு தான் பல்லாண்டு காலமாக கிராமசாந்தி நடைபெற்று வருகிறது. இதனைச் சாந்தி வைரவர் எனவும் கூறுவர். பூசை புனஸ்காரங்களில்லாவிடினும் அருளாட்சி மிக்கவர் என்பர் உக்கிரம் பொருந்தியவர் என்பதும் முன்னையோர் கூற்று. முன்னாளில் இவருக்கு தேங்காய் உடைத்துக் கற்பூரம் கொழுத்தி வழிபாடாற்றுவர் என்பர். இங்குள்ள கருக்குவாச்சி விருட்சம் பல்லாண்டு களாக ஒரே மாதிரியாகத்தான் இருந்து வருகிறது. வளர்ச்சிய டைவதுமில்லை குன்றிப் போவதுமில்லை. காரணம் யாதோ அறியோம். ஆலயம் என்பது இன்றுவரை இல்லை வருங்கா லத்தில் அமையலாம். தற்போது வைரவ சூலமும் மேடையுமுண்டு.

### எல்லை மானப் பந்தலடி

இது மூன்றாம் வீதியில் வடமேற்கு மூலையில் உள்ளது. உற்சவ காலங்களில் இங்கு இறைவனார்க்கு மண்டகப்படி இட்டுப் பூசை புனஸ்காரங்கள் நடைபெறும் இங்கும் வைரவக் கடவுள் எழுந்தருளி உள்ளதாக முன்னோர் கூறுவர். தேர்த் திருவிழாவின் போது தென் கிழக்கு மூலையிலுள்ள மடத்திலும் மண்டகப்படி இடப்படும்.

### தல விருட்சம்

இரண்டாம் வீதியிலுள்ள அரசமரமே தல விருட்சமாகும். இது ஏறக்குறைய அறுநூறு ஆண்டுகட்கு முற்பட்டது போலும். இங்கு தான் முதன் முதலில் தெய்வ வழிபாடு தொடங்கப்பட்டது. வைரவ சூலத்தைத் தாபித்து வழிபாட்டைத் தொடங்கி வைத்தவர் ஆண்டி முனிவரேயாவர். ஆண்டி முனிவருக்கு முன்னும் இங்கு தெய்வ வழிபாடு இடம் பெற்றிருக்கலாம். இது பற்றி நாம் யாதும் அறியோம். காரைநகரிலுள்ள மரங்களில் இதுவே காலத்தாற் கூடியது (அடுத்து தினகரன்பிட்டி ஆலினைக் கூறலாம்) ஆண்டி முனிவர் இவ் அரசமரத்தின் கீழேயே வழிபாட்டைத் தொடரலானார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னாரின் ஞானப் பணியை அறிந்த மக்கள் அவருக்கு உதவியாகத் தெய்வப் பணியில் பங்கு கொண்டனராம்.

ஆண்டியுடன் அம்பலவி முருகரும் சேர்ந்து குருசீட முறையில் தெய்வ வழிபாடாற்றிய பெருமை பெற்றது. இருவரும் மகாஞானிகள். காரை மாநகரின் சித்தர் குழாம் எனக் கூறும் தகுதி உடையவர்கள் இதனைத் தெய்வீக அரசென்றே கூறவேண்டும். இந்திய புத்தமுனிவர் (புத்தபிக்கு) ஒருவர் மன அமைதியற்று பல ஆலயங்களை வணங்கி இறுதியில் இவ்வரசின் கீழ் இறைவனை வழிபட்டு மன அமைதி பெற்றுத் தெய்வீகப் பேறெய்தினார். அப் புத்த முனி சமாதியுற்ற இடம் இரண்டாம் வீதி முடிவில் சுப்பிரமணியர் ஆலயத்திற்கு வட மேற்கு மூலையில் உள்ளதென இவ்வாலயத்துடன் தொடர்புடையோர் கூறக் கேட்டிருக்கிறேன். புத்த முனி இங்கு இறை வழிபாடாற்றி தெய்வீகம் எய்திய தன்மையை விபுலானந்த அடிகள் நீதிபதி நடராசாவிற்கு கூறியுள்ளார். இதனை நடராசா மணியகாரன் முருகேசுவற்குக் கூறியதை அவர் எனக்குக் கூறினார்.

ஏதோ ஒரு வழியில் இத்தல விருட்சத்திற்கு மகாசக்தி ஒன்று இருக்கத்தான் செய்கிறது. மன அடக்கத்துடன் இவ்வரசின் கீழ் இருந்து தியானிப்பவர்கட்கு எண்ணியதெல்லாம் கைகூடும். என்பது நம்பிக்கை. ஆண்டியையும் அம்பலவி முருகரையும் மகாஞானியாக்கிய பெருமை அரசிற்குண்டு

## ஆண்டிக் கேணி

இது தல விருட்சத்திற்கு அண்மையில் தென் கிழக்கு மூலையில் இருந்தது இப்போது தூர்ந்து போயுள்ளது. இதனைத் தோண்டும் போது தான் ஐயனார் வடிவம் வெளிவந்தது. இங்கு ஐயனாரை மறைத்து வைத்தவரும் ஆண்டி எனும் பெரியோராவர் இவர் ஆண்டி முனிவரிலிந்து வேறுபட்டவர். விக்கிரகத்தை மறைத்து வைத்த பெரியார் ஆண்டி போத்துக்கீசர் காலத்தவரெனின் பொருந்தும். 1621-ல் யாழ்ப்பாணம் போத்துக்கீசரால் கைப்பற்றப் பட்டது. அதற்கு முன்பின்னாக வாழ்ந்திருந்ததாகக் கருதலாம். போர்த்துக்கீசர் ஆட்சியின் ஆரம்பத்தில் தான் வியாவிலிருந்து ஐயனார் திண்ணபுரத்திற்குக் கொணரப்பட்டார். கொணர்ந்தவர் பெரியார் ஆண்டியாகவும் இருக்கலாம். பெரியார் ஆண்டி காரைப் புதரிடையே மறைத்துப் பூசனை புரிந்திருக்கலாம் போர்த்துக்கீசரின் சமயவதை காரணமாக மறைக்க வேண்டி ஏற்பட்டது.



## அரசடி வயிரவரும் ஐயனார் வழிபாடும்.

அன்னியர் ஆட்சியால் ஆலய வழிபாடு குன்றி சைவம் தளர்வுற்றது. சைவாலயங்கள் இடிக்கப்பட்டன. இறைவனும் சைவ நன்மக்களுக்கு அனுக்கிரகம் செய்வான் போல் ஆங்கிலேயர் ஆட்சியில் சமய சுதந்திரத்துடன் வாழலாயினர். போர்த்துக்கேயர் ஒல்லாந்தர் காலச் சமயவதை ஒருவாறு முற்றுப் பெறலாயிற்று.

பறங்கியர் ஒல்லாந்தர் காலத்தில் விக்கிர வழிபாடு நடத்துதல் தண்டனைக்குரிய குற்றமாகும். இதனால் தான் வயிரவ சூலத்தை வளவினுள் யாவருக்கும் தெரியாதவாறு வழிபடலாயினர். படங்களில் வழிபடுதல் கூட முடியாத காரியம் இக் கட்டுப்பாடு பின்னர் வழக்கமாகி புதிய வீடு கட்டினாலும் இலக்குமி படத்தினை வீட்டினுள் வைத்து தீப மேற்றுதல் இல்லாது போயிற்று. பறங்கியர் கட்டுப்பாட்டினால் பகிரங்கமாக நெய்தீபம் ஏற்றுதல் இன்றி வீட்டு மண் சுவரினுள் மாடம் அமைத்து சிறிய தீபத்தினை ஏற்றுவர் போலும். புது மனைப் பிரவேசத்தின் போது இலக்குமி படத்தை உள்ளே கொண்டு சென்றாலும் பூசனை முடிந்தபின் படத்தை திண்ணைச் சுவரிலேயே தொங்க விட்டுவிடுவர். ஏறக்குறைய எழுபத்தைந்து ஆண்டு நூறாண்டு வரையில் தான் வீட்டினுள் படத்தை வைத்து வழிபடும் முறை மீண்டும் ஏற்பட்டது போலும்.

சமய வதையோ வழக்கமோ என்னவோ பெரும்பாலும் அரச மரங்களின் கீழ் சூலத்தை நாட்டும் வழிபாடு ஏற்பட்டது போலும்.

ஆண்டி முனிவர் சூலத்தை அரசின் கீழ் வழிபாடாற்றி வந்த நாள் முதலாக காரைநகரின் பல்வேறு பகுதிகளிலுமுள்ள அடியார்கள் வந்து வழிபாடாற்றிச் செல்வது வழக்கமாக இருந்தது. ஆண்டி முனிவரே பொங்கல் பூசனைகள் செய்து இறை ஒளி காரை மாநகரில் பிரகாசிக்கச் செய்தார்.

ஆரம்பத்தில் ஆட்டின் பாலைப் பொங்கலுக்கு உபயோகித் ததாகவும் அதன் பின்னரே ஆவின் பாலைக் கொண்ட தாகவும் முதியோர் கூறக் கேட்டிருக்கின்றோம். ஆனால் ஆட்டின் பாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னர் பொங்கலிட்டவர் விக்கிரகத்தை இங்கு கொணர்ந்த ஆண்டியாகவும் இருக்கலாம். இவ்வாண்டியும் எவ்வாறு சிதம்பர நடேசரை முஸ்லீம் படை எடுப்பிற்கஞ்சி ஆலமரப் பொந்தினுள் தில்லை வாழ் அந்தணர்கள் பூசனை புரிந்தர்களோ அவ்வாறே இவ்வாண்டியும் இவ்விக்கிரகத்தை அரச மரச் சூழலில் காரை மரக் கூடலில் மறைத்து வைத்துப் பூசனைகள் புரிந்திருக்கலாம். பறங்கியரின் கெடுப்படி மேலும் கூட இதனை நிலத்தினுள் மறைத்திருக்கலாம். இந் நிலமும் முன்பு கால் நடைகள் நீர் அருந்தும் கேணியாக இருக்கலாம் விக்கிரகத்தை மறைந்து வைத்த ஆண்டி ஆடு மேய்த்தவர் என்பது கொள்ளத் தக்கது. எனவே அவர் தான் ஆட்டுப் பாலில் பொங்கலிட்டார். என்பதில் தவறில்லை பெரியர் ஆண்டி முனிவர் காலத்திற்கு முற்பட்டவர். இராமநாதபுரம் சேதுக் கரையை காவல் செய்த வம்சா வழித் தோன்றவே ஆண்டி முனிவர் என நுல்களில் காணக் கிடக்கிறது.

ஆண்டி முனிவர் வழிபாடாற்றி வரும் போது ஓர் ஒளி தென்பட்டது இந் நிலையில் ஒளி தென்பட்ட பள்ளத்தின் ஐதீகத்தைக் கருத்திற் கொண்டு தோண்டும் போது ஐயனார் விக்கிரகம் தோற்றப்பட்டது. இது வியாவிலிருந்து பரங்கியரால் அழிக்கப்பட்ட ஐயனார் கோவிலின் விக்கிரகமே என்பது அன்பர்கள் யாவரும் ஏற்றுக் கொண்ட முடிவு மட்டுமல்ல ஆராய்ந்த முடிவுமாகும். வைரவ சூலத்தையும் ஐயனார் விக்கிரகத்தையும் அரசின் கீழ் வைத்து ஆண்டி முனிவரும் வழிபாடாற்றி வந்தார். அன்பர் தம் தொகையும் நாளுக்கு நாள் கூடி வந்தது. அனபில் சிறந்த அம்பலவி முருகரும் அருளினால் ஈர்க்கப்பட்டு ஐயனார் வசமானார். குரு சீட பாவனையில் இருவரும் வழிபாடாற்றி வரலானார் ஆண்டி முனியும் உடலையும் உளத்தையும் ஐயனாருக்கே அர்ப்பணித்தார். இந் நிலையில் ஐயனாரின் அனுகத் தொண்டரான அம்பலவி முருகரும் தனது உடல் பொருள் ஆவி அத்தனையையம் ஐயனாரின் பாதங்களுக்கே சமர்ப்பித்தார்.

## ஐயனார் ஆலயம்

இந்நிலையில் ஆண்டி முனிவர் ஐயனாரில் ஐக்கியமானார். அடியார்களும் அம்பலவி முருகரும் ஒன்று சேர்ந்து அன்னாரின் பூத உடலுக்கு வழிபாடாற்றி ஆலயச் சூழலுக்குள் சமாதி நிலை கொள்ளச் செய்தனர். அதன் பின் அன்பிற் பெரியார் அம்பலவ



முருகருக்கு ஐயனாருக்கு கோயில் அமைக்க வேண்டும் என்ற பேரவா உண்டாயிற்று. எனவே தனது சொந்த ஆதனத்தில் கோயில் அமைக்க முயற்சிகள் மேற் கொள்ளத் தொடங்கினார். (ஆண்டி முனி சமாதியான இத்தினத்தில் தான் ஐயனார் ஆலயம் ஆரம்பமான தென்பது ஐதீகம், ஐதீகம் மட்டுமல்ல செவி வழி வந்த உண்மைச் செய்தியும் கூட) மாசிலா மணியார் காலத்தில் கூட இச் செய்தி அறியப்பட்டது. மட்டுமல்ல அவரால் கூறப்பட்டதும் கூட இதனை அறிந்தவர்கள் சிலர் இன்றும் இருக்கின்றார்கள்) ஆண்டி முனிவரின் ஆன் மீகம் அம்பலவி முருகருக்கு உறுதுணையாக இருந்து வந்தது.

ஐயனார் ஆலயம் பூரண நிலை எய்தியது அம்பலவ முருகரும் அடியார்களும் சேர்ந்து சிறந்த நல்ல நாளில் ஆகம வல்லுனராம் அந்தணப் பெரு மக்களைக் கொண்டு குட முழுக்குப் பெருவிழாவை நிறைவேற்றிக் காரைநகரில் ஐயனாரின் அரளா டல்கள் தொடர வாய்ப்பேற்படுத்தினர். வழி வந்த செய்தியின் படி ஒரு சித்திரை மாத திருவோண நட்சத்திரத்தில் கும்பாபிசேகம் இடம்பெற்றிருக்கலாமென அன்பர்கள் கருதியதில் தவறேதும் இல்லை எனலாம். அதுவும் 1825ம் ஆண்டு இடம்பெற்றதாகவும் கொண்டுள்ளனர். போலும் இதுவும் சரியானதே எனக் கொள்ளலாம். ஏனெனில் கச்சேரியிலுள்ள பதிவுகளின்படி இக் கோயில் கட்டப்பட்டது 1825 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

முன்னர் வியாவிலில் இவ் ஐயனாருக்கு முதற் கும்பாபிடேகம் ஓர் வைகாசித் திருவோணத்தில் தான் நடைபெற்ற தென் பண்டைய ஏடுகளை ஆதாரமாகக் கொண்டு காரைநகர் மான்மியம் எடுத்துக் காட்டுகிறது. மங்கல முழுக்கு நிறைவெய்திய பின் அந்தணப் பெருமக்களைக் கொண்டு பூசனைகளையும் விழாக்களையும் மேற்கொள்வராயினர்.

பின்னர் உற்சவ மூர்த்தியை வார்ப்பித்து கும்பாபிடேகத்தை நிறைவேற்றினார். உற்சவ மூர்த்தி வார்க்கப்பட்டதும் அன்பினால் விளைந்த அம்பலவ முருகர் தன்னிடம் தருமாறு வேண்டினார். ஆனால் சிற்பாசாரியாரோ அதற்கு இடங்கொடாது ஒப்பஞ் செய்ய ஆரம்பித்தார் இந்நிலையில் மூர்த்தியில் இருந்து உதிரம் கொப்பளித்தது. இவ்வற்புதத்தைக் கண்ட சிற்பக்கலை வல்லோன் அருளில் மூழ்கி அக் கணத்திலேயே மூர்த்தியை அம்பலவ முருகரிடம் ஒப்படைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந் நிலையில் மார்கழி திருவெம்பாவை பத்து நாட்களும் அபிடேகம் பூசை திருவிழா திருவெம்பாவை ஓதல் முதலியவற்றை ஐயனாருக்கு நடப்பிதது வந்தார். மேலும் பங்குனி உத்தரத்தைத் தீர்த்த தினமாகக் கொண்டு ஐயனாருக்கு சகல அங்கங்களுடனான (கொடியேற்றம், தேர், வேட்டை)மகோற்சவத்தையும் மேற்கொள் வராயினர். அதுதான் போலும் இன்றும் பங்குனி மகோற்சவ வேட்டைத் திருவிழாவின் போது ஐயனாருக்கு முதலிடம் கொடுக்கப்படுகிறது போலும். ஆனி உத்தரத்தில் நடந்ததாகவும் கருதப்படுகிறது.

ஐயனாரில் விளங்கிய அற்புதங்கள் பல ஒரு முறை அர்ச்சகர் ஒருவர் ஆசாரமற்றவராய் ஆலயத்தினுட் பிரவேசிக்க முற்பட்ட போது நாகம் குறுக்கிட்டது. அதனைப் பொருட்படுத்தாமல் உள்ளே செல்ல முற்பட்டார். அப்போது யாரோ பிடரியில் அடிப்பது போல் உணர்வேற்பட்டு திரும்பினார் அன்றிலிருந்து கழுத்து ஒரு பக்கம் திரும்பியதும் ஐயரும் கழுத்துத் திரும்பிஜயர் எனவும் அழைக்கப்பட்டார். குழையன், வாலன் என்னும் இரு நாகங்கள் ஐயனாருக்குப் பணி செய்து வந்ததுடன் ஆலயத்திற்கும காவலாக அமைந்தன.

பெண்களில் சிலர் தேங்காய்களை கடகங்களில் மறைத்து வைத்திருந்தால் நாகங்கள் அக் கடகங்களில் ஏறியிருக்கும். தேங்காய் முதலியவற்றை மறைக்காது அப்புறப்படுத்தினால் தான் நாகங்கள் கடகத்தை விட்டுத் தூரச் செல்லுமென பெரியோர்கள் கூறுவர். இவ்விடயங்கள் பலநூல்களிலும் இடம்பெற்றுள்ளன. இந் நாகங்கள் கடல் கடந்து பொன்னாலைப்பகுதிக்குச் சென்று ஐயனாருக்கு மலர் எடுத்து வருவதாக பெரியோர் கூறக் கேட்டிருக்கின்றோம்.

அந் நாகங்கள் கடலில் வரும் போது களைப்புற்றால் மீனவரின் பறி எனப்படும் கூடைகளில் ஏறி அமருமாம். மீனவரும் ஐயனாரின் அருளாடல் என மனம் புளகாங்கிதம் அடைவார்களாம். ஆலயத்தில் திருட்டுக்கள் நடைபெறாது அம்பலவி முருகருக்கு உதவி புரிந்தவை இந் நாகங்களே. சில வேளைகளில் அம்பலவி முருகரின் பாங்கில் துயில்வதாகவும் பெரியோர் சிலர் கூறக்கேட்டிருக்கிறேன்.



இவ்வாலயத்தில் நடைபெறும் அதிசய அற்புதங்கள் யாவும் ஐயனாரின் அருளாடல்களே என்பது அன்று முதல் இன்றுவரை மக்கள் கொண்டுள்ள நம்பிக்கை ஆகும்.

ஐயனார் ஆலயம் சிவாலயமாகும் அருட்கருணை அம்பலவி முருகரின் உள்ளத்தில் உதித்தது.

## ஆண்டியும் அம்பலவி முருகரும்

ஆண்டி முனிவர் தெய்வீகப் பேறு பெற்றவர் அம்பலவி முருகரை ஆட்கொள்ளும் வல்லமை பெற்றவர். சித்துக்களும் தெய்வீக அருளும் கிடைக்கப் பெற்றவர். ஆண்டி எனும் பரதேசி என்பது கொள்ளத் தக்கது. ஆண்டியைப் பற்றிய வரலாறு யாவும் மறைபொருள் அவரின் ஊர்கிராமம் முதலியன தாய் தந்தையர் தெரியாத இந் நிலையில் தான் அவரைச் சித்தர் எனக் கொள்ள வேண்டி நிலையில் உள்ளோம். ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தின் ஆரம்ப காலமே அவரின் இறுதிக் காலமாகும். அம்பலவி முருகரை விட வயதில் முதிர்ந்தவர் என்பதில் தவறில்லை. 1825 இல் தான் ஐயனார் முதலில் இப்போது உள்ள இடத்தில் கற் கட்டிடமாக நிறுவப்பட்டது. அதற்குச் சில ஆண்டுகட்கு முன்னரே ஆண்டி (1820க் முன் பின்னாக) இறைபதம் எய்திருக்கலாம் என்பது உறுதி.

ஆண்டி முனிவர் காரைநகர் வாசியா என்பது கேள்விக் குறியாகும் ஆனால் அவர் சேதுக்கரை இராமேஸ்வரம் போன்ற பகுதிகளில் இருந்து வந்திருக்கலாம். என ஈழத்துச் சிதம்பர வரலாற்று நூல்கள் எடுத்துக் காட்டுகின்றன. சித்தர்களினதும் ஞானிகளினதும் வரலாறு அறிந்து கொள்ள முடியாத உண்மை. ஆண்டி முனிவர் காரைநகரை பிறப்பிடமாக கொண்டவராக இருந்தாலும் சிறப்புடையதே. ஆண்டி முனியின் வாழ்வு மறை பொருள் மறைப் பொருள் ஆகும்.

அவர் தமிழகத்தவராய் இருந்தால் 1796ன் பின்பே காரைநகருக்கு வந்திருக்கலாம். ஏனெனில் 1796 க்கு முன் யாழ்ப்பாணக் குடா நாட்டில் சமயவதை நடந்த காலமென சரித்திரம் கூறுகிறது. 1796ல் சித்தராகவே ஆண்டி பொலிந்து விளங்கினார் என்பதும் உண்மையே ஆண்டி முனிவர் பொங்கல் பூசனைகள் புரிந்தார். என்பதும் உண்மையே ஆட்டுப் பாலிலும் பொங்கல் இடம் பெற்றதெனப் பெரியோர்கள் கூறுவர். ஆட்டுப்பாலில் பொங்கல் பூசனைகள் புரிந்தவர் ஆண்டி முனிவரா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது விக்கிரகத்தை நிலத்தினுள் மறைத்துப் பாதுகாப்பாக வைத்த பெரியார் ஆண்டியார் என்பதனை அறியோம். ஆண்டி முனிவர் இறை வழிபாட்டில் ஈடுபட்டு அமைத்து வந்ததை

''உற்றாரை யான் வேண்டேன்
ஊர் வேண்டேன்
பேர் வேண்டேன்
காற்றை யான் வேண்டேன்
கற்பனவும் இனி அமையும்
குற்றாலத் தமர்ந் துறையும் கூத்தா
உன் குரை கழற்கே கற்றாவின் மனம்
போலக் கசிந்துருக வேண்டுவனே

என்ற திருவாசகத்தின் உட்பொருள் எடுத்துக் காட்டுகிறது.

இந் நிலையிலுள்ள ஆண்டி முனிவரை அம்பலவி முருகர் வந்தடைந்த வரலாறு ஊனக் கண்ணையும் ஞானக் கண்ணையும் கொண்டு ஆராயத் தக்கது. இல்லறமாம் நல்லறம் புரிந்தவர் அம்பலவி முருகர் அக்கால நில உடைமையாளருள் ஒருவர் ஆண்டி முனியை அம்பலவி முருகர் சந்தித்தது வாதவூரர் திருப்பெருந்துறையில் குருந்தமர நிழலின் கீழ் இறைவனைச் சந்தித்ததை ஒக்கும் எனில் தவறில்லை. ஆண்டி முனிவர் பூசனை வழிபாடுகள் செய்கின்றார் என்பதை அன்பர்கள் மூலம் அறிந்த அம்பலவி முருகர் தனது நிலத்தில் யார் வந்திருந்து வழிபாடாற்றுகிறார் என்பதனை அறியவே வந்தார். போலும் உண்மையை அறிய வந்த அம்பலவி முருகர் ஐயனாரின் மகா சக்தியால் ஈர்க்கப்பட்டு அணுகத் தொண்டரானார்.

இது விவேகானந்தர் இராமகிருஷ்ணரைச் சந்தித்ததை ஒக்கும் என்பதில் தவறேதுமில்லை.

## சிவாலயமும் சிதம்பர தரிசனமும்

ஆண்டியும் அம்பலவி முருகரும ஒட்டிப் பிறவா இரட்டையர்கள் என்பர். சிவனே சைவரின் முழு முதற் கடவுள். இதனை மனதின் கண்ணே கொண்டு போலும் சிவாலயம் அமைக்கும் பணியில் அம்பலவி முருகர் ஈடுபடலானார். எல்லாம் திருவருளின் பேறேயாம் ஐயனாருக்கு வடக்கே இது ஆரம்பிக்கப்பட்டது.



ஆண்டியின் அற்புத ஆற்றலும் ஐயனாரின் அருளம் அம்பலவி முருகருக்கு திருவருட் பணியில் சித்தியையும் சக்தியையும் தந்தது. சிவாலயமும் அமைக்கப்பட்டு குடமுழுக்கு விழாவும் நிறைவெய்தியது. இது 1848ல் நடை பெற்றதாகும். இங்கு எழுந்தருளியிருக்கும் சுந்தரேஸ்வரப் பெருமான் சிற்பாசாரியாரால் அமைக்கப்படாத பாணலிங்கமாகும. ஆலயப் பணியில் கந்தன், சங்கரன் என்னும் இரு எருதுகள் களைப்பின்றி பெரிதும் உதவின. இதுவும் ஆண்டியினதும் ஐயனாரினதும் அருளேயாம்.

சிவாலயம் பாபிடேகத்திற்கு முன் சிவலிங்கத்தை பெறுவதற் காகச் சிதம்பரம் சென்றார். அங்கே இதற்காகத் தேடி அலைந் தார். வழியில் ஓர் பெரியவர் தோன்றி ஓர் சைவாசாரியார் வீட்டைக் காட்டி மறைந்தார். ஏதோ நூல்களில் காற்று எழுவதினால் சிறந்த விருப்பத்திற்குரிய இலிங்கத்தை அறிந்தார். எனத் தெரியப் படுத்துகின்றனர். இந் நிலையில் அன்பர்களின் உதவியுடன் இலிங்கம் பெறப்பட்டது. இதற்குரிய அம்பிகையையும் அங்கிருந்தே கொணர்ந்தார். கும்பாபிடேகமும் 1848ல் இடம்பெற்றது. இந் நிலையில் சிவபெருமானுக்கு மகோற்சவத்தை சிறப்புற நடாத்துவதற்கு உற்சவ மூர்த்தியை பிரதிட்டை செய்ய வேண்டி இருந்தது. இதற்காக மகன் சண்முகத்தாருடன் சிதம்பரம் சென்றார்.

அங்கே சிற்ப வல்லுனர் மூலம் மூர்த்தியை வார்க்க முயன்றனர். பல முறையும் கருவானது சிதைவுற்றது. இதனா லன்றோ என அம்பலவிமுருகர் தன் காதுக் கடுக்கன்களை கழற்றி செம்பொன் உருகுகின்ற குகையில் இட்டார். மூர்த்தியும் அழகுற அமைந்ததை சிற்ப வல்லுனர் மூலம் அறிந்த அம்பலவி முருகர் இறைவனுடன் ஐக்கியமானார். அந்நேரத்தில் தேவதுந்துபிகள் ஆர்த்தது ஐதீக மென திண்ண புரமான்மியம் எடுத்துக் காட்டுகிறது.

பின்னர் மூர்த்தியை முன்னரே அனுப்பி விட்டு தாம் வேறோர் வள்ளத்தில் பயணம் செய்த போது சேதமுற்றது. அப்போது இறையருளால் மிதப்பு அகப்பட இரு நாட்களின் பின் அதிகாரம்பேட்டையை அடைந்தனர். முஸ்லீம்களால் காப்பாற்றப் பட்டுப் பின்னர் வேறோர் வள்ளத்தில் ஊர்காவற்துறையை அடைந்தனர். பின்னர் உரிய காலத்தில் குட முழுக்கு விழா நடந்தேறியது. பின்னர் திருவாதிரை பங்குனி உத்தரம் முதலியவற்றை தீர்த்த தினமாகக் கொண்டு அலங்கார உற்சவங் களும் மகோற்சவங்களும் இடம் பெறலாயின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந் நிலையில் நடராசப் பெருமானின் கும்பாபிடேகம் 1908ம் ஆண்டு இடம்பெறலாயிற்று. இங்குள்ள நடராசர் புன்சிரிப்புடன் விளங்கும் அருளாளர் திருவாதிரை போல் ஆனி உத்திரத்தை தீர்த்தமாகக் கொண்டு 10 நாட்கள் மகோற்சவம் இடம்பெற்றது எனப் பெரியோர் கூறுவர். சிலர் இது தான் பின்னர் பங்குனி உத்தர மகோற்சவமாக மாற்றப்பட்ட தென்பர். சில வேளை ஆனி உத்தரம் ஆரம்பிக்கப்பட்டும் இருக்கலாம் எனவே முன்பு பங்குனி, மார்கழி, ஆனி ஆகிய முப்பெரும் மகோற்சவங்கள் இடம் பெற்றிருக்கலாம் என்பதில் தவறில்லை.

இந் நிலையில் அம்பலவி முருகரைத் தொடர்ந்து சண்முகத்தார் மாசிலாமணி முதலிய ஆலய மணிய காரர்களின் பணி போற்றுதற்குரியது. அம்லவி முருகர் காலத்தில் ஆலயப் பணியில் ஈடுபட்டிருந்த இரு நாகங்களும் சண்முகத்தார் காலத்திலும் தம் பணியைத் தொடர்ந்தன.

மாசிலாமணி காலத்தில் ஐயனாரின் கருவறைஅர்த்த மண்டபம் என்பன புதிதாக வெள்ளை வயிரக் கல்லினால் அமைக்கப்பட்டு அழகுடன் விளங்குவது நோக்கத்தக்கது. ஆலயம் புதிதாக அமைக்கப்பட்ட தென்பது உண்மை தான் ஆனால் மூர்த்தி அமர்ந்திருக்கும் பீடமும் அதன் சூழலும் அகற்றப்படாது இருந்தவாறே புதிய ஆலயம் அமைக்கப்பட்ட தென்பது உண்மை.

ஆலயத்தை புதிதாக அமைக்கும் போது பாலாலயத்தில் ஐயனாரை எழுந்தருளச் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. அதற்காகச் சிற்ப வல்லுனர் அவ்விக்கிரகத்தை தூக்கி வருவதற்காக உள்ளே சென்றபோது காற்றினால் வெளியே தள்ளப்படுவது போன்று ஒருநிலை ஏற்பட்டது. இதனால் அச்சமுற்ற சிற்ப வல்லுனர் இது தன்னால் முடியாத காரியம் எனக் கூறிப் பின்னடைந்தார். அப்போது ஐயனாரின் அருளுக்குப் பாத்திரமாகிய பெரியார் மாசிலாமணி அப்பனே வருக என வேண்டி எடுக்கி பாரமில்லாதது போல் இலகுவாக கற்பக்கிரகத்திலிருந்து வெளியே கொணர்ந்து அமரச் செய்தார். இந்நிலையில் மயிர்கூச்செறிந்து ஆவேசுற்ற அடியவராம். அன்பரொருவர் கூறியதை ஐயனார் வாக்காகக் கொண்டே பீடமும் சூழலும் அகற்றப்படாமல் கட்டப்பட்டதென்பர். அம்பலவி முருகரால் அமைக்கப்பட்ட பீடமும் சூழலும் அகற்றப்படாது தொடர்ந்து விளங்குவது அற்புதமே என்பது



அடியார் தம் உள உறுதியாகும்.இதனைக் காருத்திற் கொண்டே 1928ம் ஆண்டு கும்பாபிடேகத்தின் பின் எக் காரணம் கொண்டும விக்கிரகத்தை வெளியில் கொணர்வதில்லை 1970ம் ஆண்டு கும்பாபிடேத்தின் போதும் கூட ஐயனார். விக்கிரகம் வெளியே கொணர்வதில்லை 1987ல் இடம்பெற்ற பாலாலய வழிபாட்டின் போது பல்வேறு காரணங்களால் ஐயனார் விக்கிரகம் வெளியே கொணரப்பட்டது. இதனால் நாம் பல தொல்லைக்குள்ளானோம் என மக்கள் கூறாமலில்லை இந் நிலையில் 1998ல் இடம் பெற்ற கும்பாபிடேகத்தின் பின் ஐயனார் ஆலயத்தினுள் சென்ற பின் நாடும் மக்களும் மகிழ்வுடன் விளங்குவதாக அன்பர்கள் தமக்குள்ளே கருத்துரை பரிமாறிக் கொள்வது நாம் அறியாத தொன்றல்ல.

ஐயனாரை மதியாது அல்லது முதலிடம் கொடாது தொடங்கும் எந்தக் காரியமும் நிறைவேறுவதில்லை என்பது மக்களின் மன நம்பிக்கை. இந் நிலையில் 1970ம் ஆண்டு கும்பாபிடேகம் இடம் பெறுவதற்கு முன் சிவன் வாசலில் பாரிய முறையில் இராச கோபுரம் கட்டுவதற்கென அத்திவாரம் திருப்பணிச் சபையால் இடப்பட்டது. பலவாறு முயன்றும் இம்மியளவும் முடியவில்லை. இந் நிலையில் ஐயனாருக்கு கோபுரம் கட்ட முயலாமையே சிவன் வாசல் கோபுரம் எழுவதற்குதடையாக அமைகிறது. என மனதிலும் வாக்கிலும் கொண்டு விளங்கியது அன்பர்கள் அறியாத தொன்றல்ல. இந் நிலையில் அன்பரொருவர் உண்மையை மனதே கொண்டு அன்பர் தம் உதவியுடன் ஐயனாரின் கோபுர அத்திவாரப் பகுதியைப் பூர்த்தி செய்வாராயினர். இதன் பின் செயற்பட்ட திருப்பணிச் சபையினர் சிவன் ஐயனார் இராச கோபுரங்களை 1991 ஆரம்பத்தில் பூர்த்தி செய்து 1998ல் கும்பாபிடேகத்தையும் நிறைவு செய்தனர். இது இன்று சிவாலயமாகவும் நடராசப் பெருமானின் சிதம்பர தரிசனமாக விளங்கினாலும் ஐயனாருக்கு முதன்மையும மகத்துவமும் முதலிடமும் விளங்குவதைக் கண்டு நாம் போற்றிப் புகழ்வதுடன் அக் கடமையும் நமதே என்பதையும் நாம் மறந்து விட முடியாது.

ஐயனார் ஆலயம் சிவாலயத்தின் ஒரு பகுதியே எனக் கொள்ளினும் கேள்விக் குறியாகத் தான் அமைகிறது இரு ஆலயங்களும் இணைந்து விளங்குகின்றன. என்பதே கொள்ளத் தக்கது. ஐயனாரின் தனித்துவ ஆலய அமைப்பும் போல் வருங் காலத்தில் ஈழத்துச் சிதம்பரம் என்னும் பெயரிற் கேற்ப நடராசர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயமும் பல்வேறு அம்சங்களுடன் கூடிய தனித்துவமுடைய ஆடல் ஆலயமாக விளங்கும் நாள் வெகு தூரத்திலில்லை. சிவபரம் பொருள் ஒன்றே என்பது எமது சமய தத்துவக் கொள்கை ''ஒருன் பல் பேருளன் என்ற திருமுறை வாக்கிற்கேற்ப ஐயனார், சிவன் அம்பிகை முதலிய பெயர்களை பூண்டு விளங்குவது ஓர் இறைவனே யாம்.

''ஆண்டிக் கேணி ஐயனாருக்கு அடைக்கலம்'' என நலிவுற்ற போதெல்லாம் முன்னோர் கூறுவர் அக் கூற்றுப் பொய்யாவதில்லை. இன்றும் ஐயனாருக்கு அடைக்கலமாகத் தான் இருக்கிறோம் ஐயனாரும் ஐயனாரில் அடக்கமாகிய ஆண்டி முனிவரும் அடைக்கலமான எம்மை எல்லாம் ஈடேற்றுவார் என்பது நம்பிக்கை.

ஐயனாரைச் சரணடைந்து எமது கிராமத்தைக் கட்டி யெழுப்பும் பணியில் முதன்மை பெறுவோமாக ஆண்டி கேணி ஐயனின் அற்புதவரலாறு இத்துடன் நிறை வெய்துகிறது.

''ஆண்டி கேணி ஐயனே போற்றி
அம்பலவி முருகன் வைத்த கல்லே போற்றி''



உ

ஆண்டிக் கேணி ஐயனார் துணை

# ஆண்டி முனிவர் புராணம் எனப்படும் பெரியார் ஆண்டி புராணம்

## பாயிரம்

### 01. காப்பு

காரைநகர் கிண்ணபுரக்
கவினுறு ஐயனார் தம்
பாரையே உயர்த்த வேண்டிப்
பதியினில் அமரச் செய்த
பேரையே கொண்ட ஆண்டிப்
பிரானவன் புராணமாக
சீரையே கொண்டிலங்கும்
சிறப்புடையானை காப்வே

### 02. ஐயனார் வணக்கம்

ஆண்டியார் கேணியில்
அமர்கின்ற ஐயனின்
வேண்டிடும் ப(ா)தமலர்
விழைக்கின்றேன் காக்கவே

### 03. சுந்தரேசர் துதி

அம்பலவி முருகன் வைத்த கல்லே
அருந்தமிழ்க் தலைவ ஈசா
உம்பதம் பணிந்தேன் யானும்
உதவிடு புராணமாக

### 04. புராணம் அமைவதற்குக் காரணம்

ஆண்டியார் செய்த திருப்பணியை
அருந்தமிழ் உலகிற்கெல்லாம்
வேண்டியே விளம்பிக்காட்ட
விரும்பினேன் புராணமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. நன்றி மறவாச் செய்கையினை
நாட்டிலெங்கும் எடுத்தோதி
வென்றியான அவன் பண்பை
விளக்குதலே நோக்குண்மை

06. ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்று ஒன்றில்
அரசினர் தம் இராணுவத்தின் செயற்பாட்டிற்கஞ்சி
வாயினால் ஐயன் புகழ் பாடிக் கொண்டே
வழிநடந்தோம் அகதிகளாய் காரைநகர் விட்டே

07. விட்டு வந்த ஆக்கங்களில் ஐயனார் புராணம்
வீணாக விட்டதினால் வந்த துன்பை
நட்டமாய்க் கருதாது நானும் தானும்
நாடினேன் ஆண்டி முனி(வர்) புராணமாக

08. ஐயனார் வழிபாட்டு ஆலயத்தை
அன்புடனே காரைநகர்தனில் நிறுவி
பையரவம் பணி செய்யத்தானுமாகி
பண்புடனே பத்தனுமாய் பணியே கொண்ட
மெய்மை நெறி உடையோனாம் ஆண்டி – தன்னின்
மேன்மை தனை விளக்குதலே கவிஞர் பண்பு

09. ஆண்டியவன் பண்பதினால் முனியேயா னான்
அத்தகைய வரலாற்றைப் பேணவேண்டி
வேண்டியே முழு நூலாய் அமையச் செய்ய
விளம்பினேன் புராணமதாய் முயற்சி கொண்டே

10. ஐயனார் அருளின் பேற்றால்
ஆண்டியார் புராணம் கண்டேன்
மெய்யனாய் எம்மைக் காப்பான்
மேதினி மிளிர என்றும்



## நாட்டு வளப் படலம்

01. இலங்கை எனும் மணித்தீவின்
இலங்குகின்ற தலையதுவாய்
நலங்கள் நிறை யாழ் நாடே
நாம் வாழும் குடாநாடாம்

02. குடாநாட்டின் குடதிசையில்
கொழிக்கின்ற ஆழ்கடலில்
கடாரம் காண் கலம் போல
காண்கின்ற தீவதுவே

03. தீவதுவாம் திரு நகராம் காரைநாடே
திருத்திண்ணபுரம் கொண்டதாயாம்நாடே
பாவங்கள் அறுக்கினற பெருமை கொண்ட
பண்புடைய திரு நாடே என் தன் தாயே

04. தாயாம் நாடே காரைமாதே
தாழ்ந்து பணிந்தோம் உன்தன் பாதம்
பேயாய் எம்மைத் திரியாதென்றும்
பேணிக் ககாப்பாய் எந்தன் தாயே

05. பாக்கு நீரிணை என்னும் படர்கின்ற ஆழி
பாங்குடனே காரை தனை வலமதாயக் கொள்ள
தேக்குகின்ற நீருடைய பொன்னாலைக் கடலேரி
திகழ்கின்ற குணதிசையில் எல்லையதாய் என்றும்
தாக்குகின்ற பெருங்கடலின்
- தன்மையினைக் குறைக்க
தானதுவாய் இயங்குகின்ற ஏரியதாம் துறையூர்

06. கடல்கள் நாற்புறம் கொள்வது தீவு
காரைநகர் தானும் இத்தகை அமைவே
திடல் கொள் கரைகள் யாவுமே நாளும்
தீய்ந்து போவது நாம் அறிமெய்யே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07. இயற்கை சால் வளங்கள் என்றும்
இயம்புதல் முதன்மையாகும்
வயற்புல பனைப்புல வளங்களைக் கண்டு
வாழ்க்கை யாம் முயற்சிகள் கொள்ளுதல் - கடனே

08. மருதநிலம் நெய்தல் நிலம் பாலையன்னமணல் நிலமும்
இருமை ஒளி வாழ்வதனை இயற்றுகின்ற பெருநிலமாய்
ஒருமையுடன் மக்கட்கெல்லாம் உயர்வதனை உதவுகின்ற
அருமைசால் எமதூரே அருள் நிறைந்த திருவூராம்

09. கல்வி வளம் செல்வவளம் இன்று கண்டோம்
காரையாம் நாடென்னும் பெருமை கொண்டோம்
பல் வளங்கள் கொண்ட திரு காரையாம் மக்கள்
பாரெல்லாம் விரைந்திடவே கடமை கொள்வர்

10. வேம்பொடு சவுக்கு மாவும் விளங்கிடு
இலுப்பை நாவல் பூம் பொலி தெங்கும்
பொலிந்திடு பனையும்
நாம் பொலிந்திலங்க நற்பயன் தந்து
ஓம்பிடு காரையின் உயர்வுடை வனவளம்

11. கல்வித்தலங்கள் கடவுட்தலங்கள்
தொல்லை களையத் தூயதாய் நிறுவி
பல்வேறு வழிகளில் மக்களை உயர்த்த
பாரினில் கொண்ட எம்மவர் முயற்சியே

12. ஆண்டியார் காலத்துக்கு காரையின் வளங்கள்
அகிலத்திற்குணர்த்துதல் கவிஞர் தம்கடனே
வேண்டிய வாறே தொழில்தனை ஏற்று
விளங்கினர் தானும் பொருள்வளம் பெருக
திணையதின் அளவதாய் திகழ்ந்திடு சிறுதொழில்
தலவனாய்ப் பெருக்கவே பணியது கொண்டனர்
பனையதின் வளங்கள் பயன்படுமாறு
பல்வேறு வழிகளில் கொண்டனர் தானும்

13. கழனிகள் எங்கும் நெல்வளம் நிறைந்தன
கடற்கரை எங்கும் பல்வளம் பெருகின
பழனங்கள் எங்கும் சிறுபயிர் காய்கறி
பார்தனுக்குதவும் முயற்சிகள் பெருகின

14. கல்வி என்னும் கலைமகள் கருணையை
கவினுறு திண்ணையாம் பள்ளியில் பணிகள்
தொல்லைகள் இன்றித் தூயதாய்ப் பெற்றிட
தொடர்ந்தனர் யாவும் தூய்மையைப் பேணியே!

15. புராண படனமாம் புதுமையாய் கல்வியில்
தராதரம் தந்திடும் தகமைசால் நெறியென
பராபரன் காட்டிய பக்தியாம் வழிகளாய்
புராதன நெறியெனப் புதுமையாய் கொள்வர்

16. ஆலயம் யாவும் அருமையும் பெருமையாய்
சூலவடிவினில் தூயதாய் ஒளிரவும்
ஆலமுண்டோன் ஆலயமின்றி
காலகாலமாய் விளங்கியே நின்று

17. நாட்டு வளம் தான் கண்டோம்
நாயகன் தன் அருளதினால்
பாட்டு வளம் தானேதும்
பாவியேற் கில்லைத்தானும்
ஈட்டுகின்ற சிறப்புண்டேல்
ஈசனவன் ஐயனுக்கே
கூட்டுகின்றேன் அவனடியில்
குவலயமே சிறந்திலங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நகர் வளப் படலம்

01. காரையெனும் திருநாட்டின்
கடவுள் நகர் திண்ணபுரம்
பாரையே உயர்த்துகின்ற
பான்மைகள் தானும் கொள்ள
கூரையே இல்லாக் கோவில்
கோலுனினில் இறைவன் கொள்ள
பேரையே விரும்பாப் பண்பால்
பிரானவன் நகரம் காண்போம்

02. ஈசான மூலையினில்
இலங்குகின்ற திருநகரம்
ஆசானாம் சிவனவனே
அமர்கின்ற திருநகரம்
வாசமாம் மலர்நாடி
வண்டு ஒலி திண்ணநகர்
மாசற்ற பெருமையுடன்
மன்றிலவன் நடம்செய்ய

03. செந்தண்மை தனை உடையோன்
சிறப்புடைய குருசெல்லர்
அந்தணராம் பெருமையினை
அவனியிலே கொண்டுயர்ந்தோன்
வந்து செல்லும திருவாரூர்
வளர்தேரின் சக்கரத்தை
பந்தமின்றித் தொட்டுயர்ந்தோன்
பண்புடைய நெடுங்கந்தர்

04. இத்தகைய மக்கலெல்லாம்
இலங்கி வளர் திண்ணபுரம்
அத்தகைய பல்லோர்கள்
அவ்விடத்தில் வாழ்ந்திலங்க
வித்தகனாம் புத்தமுனி
விளங்கியருள் திருப்பதியே
எத்தனையோ பெருமைகளை
ஏழையேன் முயல்வதுவோ



05. ஆவொடு ஆடும்
ஆங்கெல்லாம் பரவிட
தேவொடு தேவியும்
திகழ்ந்திடு வாரென்றே
பாவொடு புலவரும்
பரவினர் என்றனர்
காவொடு சோலையும்
கடல் நிறை நெய்தலும்

06. குறிஞ்சி நிலம் விட்டங்கே
குவலயத்தின் நிலம் நான்கும்
இறைஞ்சுகின்ற அடியாரின்
இன்பம் நிறை வாழ் நிலமாம்
எறிந்தெழும்பும் அலைசூழ்ந்த
இலங்குகின்ற தூம்பிற்கரை
செறிந்ததமிழ் நாடதற்கே
செல்லுகின்ற துறையதுவாம்

07. ஐயனின் கோவிலும் அப்பன் கோவிலும்
அற்றே நாளில் தோற்றமாய் இல்லை
மெய்யனாய் இறைஅருள் விளங்குதற்கேற்ற
மேதினி தன்னில் ஒளித்தருள் கொண்டனன்

08. பெண்ணுக்கே பெருமை தந்த திருநகராய்
பேணுகின்ற பெருமையுடைத் திண்ணபுரம்
மண்ணுக்கே உதாரணமாய்க் கணபதியாள்
மக்களுக்கே காட்டுகினற பெயரதுவாய்

09. தந்தைவழி போற்றுகின்ற எங்கள் காலம்
தாய் வழியைப் போற்றுகின்ற ஆண்டிகாலம்
எந்த வழியானாலும் எங்கள் மக்கள்
ஏற்புடைய வழியென்றே கொண்டு நின்றார்

10. வீட்டுத்திண்ணையில் பள்ளியாம் கூடமும்
விளங்கும் மரத்தடி வயிரவர் சூலமும்
கூட்டம் கூட்டமாய் மந்தைகள் வெளிகளில்
கோபுரம் போலவே பனையதின் கூட்டமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. கருக்கு வாச்சியில் வயிரவர் ஆலமும்
கண்டனர் அன்று திண்ணமாபுரமதில்
பெருக்கம் இன்றி சூலத்தின் நிலையமும்
பேணுதல் இன்றிக் குறிப்பினில் தானும்

12. பேணுவர் இனிமேல் வைரவர் கோயிலாய்
பெருமைகள் எல்லாம் இறையவர் சிவனுக்காம்
காணுவர் தாமும் திண்ணமா வீதியில்
கற்பனைக் கெட்டா நகரதாய்ச் சிறக்கும்
ஆனிரைக் கேற்ற நீருடைக் கரைகளும்
அருந்துதற் கேற்ற கத்தரிப்படப்பும்
வானிரை அன்ன தேவர்கள் சூழலும்
வாழ்த்திடும் அடியார் வாழ்பதி எங்கனும்.

13. போக்கே போக்காய் புகழ்கின்றேன்
பொன்னின் ஐயன் திருவடியை
சாக்கே இன்றி ஆண்டிமுனி
சரிதம் தொடர்ந்து துதிப்போமே.

## ஆண்டியார் தோற்றப்படலம்

01. ஆண்டியவர் வரலாற்றைப் புராணமாக
அடியனேன் கூறு(வ)தற்கு முனைந்த போதும்
வேண்டினேன் ஐயனவன் திருக்கண் நோக்கி
விளம்புகின்றேன் வெற்றி தரும் செயல் ஈதென்றே நானும்

02. ஆண்டியர் வாழ்வின் சம்பவச் செயல்களை
அடியேன் கூறுதல் ஏற்புடைத்தாமோ
வேண்டிய ஆண்டியின் தாய் தந்தையாரையும்
விளக்குதற்கறியென் என் செய்கேன் விதியை

03. சேதுக்கரைக்குடி மன்னர் பரம்பல் என்பார்
செய்தியது நிறுவுதற்கு ஆதாரமில்லை
போதும் இதை நிறுவுவதால் புண்ணியமும் இல்லை
புண்ணியமாம் செயலிதுவே ஆண்டி முனி புராணம்



04. பெற்ற நாள் அறியோம்
பிறந்ததில் அறியோம்
சுற்றமும் தானும் காணோம்
சொந்தமும் பந்தமின்றி
கற்றவர் செயலுமின்றிக்
கடவுளர் செயலேயாக
பற்றிலர் ஆண்டி வாழ்வின்
பரம்பரை தானும் காணோம்

05. ஐயனார் வழிபாட்டாலே
ஆண்டியாம் முனிவன் எங்கோன்
மெய்யனாய் விளங்கி நின்றான்
மேன்மை யாழ். காரை நாட்டில்
செய்யவள் சிறந்து வாழ
சிறப்புடன் வழிபாடாற்றி
உய்திடும் மார்க்கம் தந்த
உத்தமன் தொண்டன் ஆண்டி

06. ஆண்டியின் கல்வி கேள்வி
அறிந்திட வழிகள் காணோம்
வேண்டிய வழி பாடாற்றி
விளங்கிய பெருமை கண்டோம்
கூண்டினில் கிளியே அன்ன
குலவிடும் சைவ வாழ்வு
மீண்டிடும் காலம் என்றே
மிளிந்தனன் கோயில் காண்

07. ஆயிரத்து எழுநூற்று எழுபத்தைந்தளவில்
ஆண்டியார் அவதரித்ததாகக் கொள்ள
அவனியிலே இக்கணக்குச் சரியாய் என்றும்
வேண்டியே விளம்புகின்றேன்
வீணென்றில்லை விதியிது வாம்
ஆண்டியார் பிறந்த ஆண்டே

08. போத்துக்கல் ஒல்லாந்தர் ஆட்சியாலே
புனிதமாம் சைவமது ஒளியே குன்ற
காத்து வரும் ஐயனவன் கருணையாலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசினியில் சைவமதம் ஒளிரும் தானே
தான் அவர்கள் சிவனாரைத் தானும் வேண்ட
தரணியிலே காரைநகர் தானும் ஓங்க
கோனவளாம் கங்கைக்கிறை கருணையாலே
குவலயத்தில் ஆண்டியவர் உதித்தார் அன்றே.

09. உதித்தனன் வரலாறு தானும் யாவும்
உண்மையிலே பதித்தற்கும் சான்று காணோம்
வதியுமிடச் சுற்றாடல் மக்கள் தாமும்
வாழ்க்கையவர் தகவல்களைப் பேணார் அன்றே

10. ஐயனாம் குடமுழுக்குத் தினத்தைத் தானும்
அறிதற்கு வாய்ப் பேதும் இல்லையாதால்
மெய்யனாம் ஆண்டியார் விபரம் தன்னை
மேதினியில் யாம் அறிய வாய்ப்பேதம் உண்டோ தானும்

11. ஆண்டியார் அவதாரம் தன்னைக் கூறி
அகிலத்தில் அவன் புகழை மேலும் நாட்ட
வேண்டியே பணிபுரியும் சுருக்கம தன்னை
விளம்புகின்றேன் அவன் நாமம் வாழ்க வென்றே

## ஆண்டியார் பணிபுரிச் சருக்கம்

01. ஐயனார் பணி புரிந்த ஆண்டி தன்னின
அருளுடைய திருச்செயல்கள் தன்னைக் கூற
மெய்யனாய் விளங்குகின்ற சிவனே சாட்சி
மேதினியில் ஆண்டி புகழ் நிலைத்து வாழ

02. காரையின் மைந்தனாக கவினுடன் வாழ்ந்த ஆண்டி
ஊரையே உணர்த்த வேண்டி உணர்வுடன் - ஆடு மேய்த்தான்
பேரையே விரும்பா தென்றும் பெரும் பொருள் மனதிற் கொண்டான்
பாரையே உயர்த்த வேண்டி பரமனின் பணியே கொண்டான்

03. ஆடுகள் மேய்க்கும் போதும்
அடியவன் முனிவன் ஆண்டி
வீடுபேறடைவான் வேண்டி
விரும்பிடு தெய்வப்பேற்றை
நாடுவான் போல என்றும்



நண்ணுவான் போல கிரியா மார்க்கம்
பாடுவான் தெய்வகீதம்
பணிகு வான் இறைவன் பாதம்

04. செவிவழியால் கேட்டநற் செய்திகள் கொண்டே
செப்புகின்றேன் ஆண்டி முனி புராணந்தன்னை
குவிகின்ற கைகளினால் தெய்வ சேவை
குவலயமே மேலோங்கப் பணிகளாற்றி
தவிக்கின்ற சைவர்களின் தாயேயாகி
தரணியிலே அவன் தொண்டு சிறந்ததென்றும்
கவியவனின் கருத்திதுவாய் முடிகவென்றே
கருதுகின்றேன் கடவுளவன் துணையே கொண்டு

05. அன்னியராம் பறங்கியர்கள் வருதல் முன்பே
அருள் திண்ண புரமதிலே அரசதாகி
மன்னிய சீர்தல் விருட்சமாகி ஓங்கி நாளும்
மாண்புடைய ஆண்டி முனி பணியே என்றும்
நன்னிய சீர்வைரவரின் சூலந்தன்னை
நானிலமும் அருள் விளங்கப் பணிகளாற்றி
மன்னிய சீர்சிதம் பரமாய் ஈழந்தன்னில்
மாண்புடனே விளங்குதற்குக் காலே கொண்டான்

06. ஏகனாய் ஒருவனாகி
இன்புடன் வாழ்ந்த ஆண்டி
தாகனாய்ப் பூசை செய்து
தரணியில் காரை நாடு
ஆகம வழியில் ஓங்க
அவன் இட்ட அத்திவாரம்
வேகமாய் பரவி நாளும்
விளங்கிடு ஈழச்சிதம்பரமே

07. இந்நிலையில் தெய்வீக அருளால் மேலும்
இலங்குகின்ற தெய்வ உரு ஐயனார் தானும்
அந்நியரின் காலமதில் மறைபட்ட திரு உருவம்
அருளினால் தென்பட்டதாண்டியவர் பணியால்
இத்தகைய காரைநகர் இலங்கியே விளங்க
இறையவனே வெளிப்பட்டான் ஐயனுருவாகி
அன்னவனின் புகழ்பாடல் அடியேனின் பணியே
ஆண்டி கேணி ஐயனே வந்து அருள் புரியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆண்டி கேணி ஐயனார் சருக்கம்

08. ஆண்டியார் அமைத்த கேணியில் தானும்
ஐயனார் வெளிவந்த வரலாற்றை மேலும்
வேண்டியே விளங்கிடக் கூறிடும் பணிகள்
விரும்பினேன் தொடர்க புராணமாய் என்றும்

09. ஆனிரைகள் பவனி வரும்
அழகுடைய திண்ணபுரம்
வானில் ஒளிர் மதியம் போல்
வையத்திற் கொளி விளக்காய்
ஊனின் உடல் உருக்கும் ஒளி
உண்மை தரும் திண்ணபுரம்
மானின் உரு தாங்கும் இறை
மறையவனார் உறை பதியே

10. அன்னியர் ஆட்சி முன்னர்
அருளுடைச் சைவக் கோயில்
முன்னிய பொருளை எண்ணி
முகிழ்ந்தன காரை நாட்டில்
இன் இரு எட்டு நூற்றாண்டு தன்னில்
எழியவன் பறங்கி தானும்
மன்னிய யாழ் நாடெங்கும்
மகிழ்ந்துமே ஆட்சி கொண்டான்

11. ஆயிரத்து அறுநூற்று இருபத்தொன்றில்
ஆட்சியினர் பறங்கியர்கள் செய்த கோலம்
நாயனையர் சைவர்கள் தம் கோயில் தன்னை
நலிவுறவே அழித்தல் செய்து செல்வம் கொண்டார்

12. கொண்டார் பறங்கியர்கள் செல்வமெலாம்
குவலயமே அழுது திரங்கி உண்மை காண
அண்டமெலாம் புகழ்கின்ற ஐயனார் உருவை
அன்பர் யார் மறைத்தாரோ அவன் நாமம் வாழ்க.

13. வியாவிலில் முன்னர் ஐயனார் கோவில்
விளங்கிய உருவம் இதுவெனக் கொள்வர்
தயாபரன் அருளால் அன்பரின் செய்கை
தரணியில் கிடைத்தது எமக்கெலாம் வாய்ப்பே
விளங்கிய உருவம் இதுவெனக் கூறினும்
விதிப்படி ஆலயம் இங்கும் இருந்ததோ
களங்கமில் திருவுடை ஐயனார் வடிவம்
காரைமா நகரின் கோயிலின் வடிவே

14. பாரிய அரசின் பக்க அடியினில்
பாங்குடன் சூலத்தை நாட்டியே போற்றுவர்
கண்ணியமான ஐயனார் வடிவை
காட்சியாய் அமைத்தனர் சூலத்தின் பாங்கே.

15. தங்கமாம் கூரையன்ன
தகைமைசால் குழைகளாலே
பொங்கிடும் கோயிலாக்கிப்
புனிதனார் அருளே ஓங்க
மங்கல மழுக்குச் செய்தான்
மனதினால் ஆண்டி தானும்
திங்கள் மும்மாரி பெய்ய
நிகழ்த்தினான் தெய்வ பூசை

16. மங்கல முழுக்குச் செய்த
மாண்புறு ஆண்டி தன்னின்
பொங்கிடும் பக்தி மாண்பால்
பொலிந்தது காரைநாடு
திங்களைத் தாங்கும் தெய்வ
பக்தனாம் பூசலார் போல்
மங்கல நாளில் ஐயன்
மாண்புறு பூசை ஏற்றான்.

17. ஆண்டியார் கேணி நீரால்
அன்புடன் நீரேயாட்டி
வேண்டியவாறு பொங்கல்
பூசனை தானும் கொண்டு
பூண்டிடா மேன்மை யாலே
புனித நன் மலரே இட்டு
வேண்டியவாறு தெய்வம்
விளங்கிடு அருளே கொண்டான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. கொண்ட நல் அருளே போற்றி
குவலயம் புரப்பாய் போற்றி
தண்டமழ் கொணர்ந்தாய் போற்றி
தலைவனே போற்றி போற்றி

## இருவர் சருக்கம்

1. ஆண்டியின் பூசை கண்ட
அம்பலவி முருகன் தானும்
வேண்டியவாறு அங்கு
விளங்கிடு பக்தி கொண்டான்
மாண்டிடா அன்பு கொண்ட
மன்பதை இருவர் தாமும்
ஆண்ட நல் நண்பர் போல
அவனியில் திகழ்வதானார்

2. ஆண்டியார் பூசை கண்ட
அம்பலவி முருகன் தானும்
வேண்டிய சீடனார் போல்
விளங்கிடு அன்பே கொண்டார்.

3. கொண்டனன் உருவம் ஒன்றாய்க்
குவலயம் தானும் போற்ற
தெண்டிரை கொழிக்கும் காரை
திருவுடை அருளினாலே
தண்டமிழ் முருகன் பாட
தரணியில் ஆண்டி பூசை
கண்டனன் கடவுள் தானும்
கைலாய மலை மேலுற்றே

4. ஆவின் பாலும் ஆட்டின் பாலும்
அன்பராம் ஆண்டி அரசியும் கொண்டே
மேவிடும் திரு வமுதாக்கியே படைத்தனன்
மேலும் சில நாள் ஆட்டினைலிட்டு ஆவினை கொண்டனன்

5. இந்நிலையில் இறையவராம் ஐயனாரின்
இடரின்றி எளிமையதாய்ப் பூசனையைத் தானும்
அந்நியராம் பறங்கியால் விளைந்த தீமை
அந்நிலையை மாற்றுதற்கு தொடர்ந்ததாகி.



6. ஆண்டியால் ஈர்க்கப்பட்ட அம்பலவி முருகர் தாமும்
வேண்டியே ஐயனாரின் விளங்கிடு தொண்டரானான்
மாண்டிடாப் பெருமை கொண்ட மன்பதை இருவர் தாமும்
தாண்டினார் உலக வாழ்க்கை தன் நலம் விட்டே நாளும்

7. இந் நிலையில் இறைவனவன் அருளால் தானும்
இலங்குகின்ற திண்ணபுரப் பதியில் தானும்
மன்னிய சீர் கோயில் தனை அமைக்கும் மாண்பை
மானிலத்தில் மனதகத்தில் முருகன் கொண்டான்

8. இருவருளம் திருவருளும் கிடைக்கப் பெற்று
இனிமைசால் ஐயனார் கோயில் தன்னை
அருளுருவின் ஒளியெனவே அமைத்தான் தானும்
அன்பரெலாம் போற்றிடுவர் நெடுநாளென்றே

9. சித்தம் தனில் ஒளியான ஆண்டி தானும்
சிறந்திலங்கும் சீடனென முருகன் தானும்
வித்தகனார் விளையாட்டு மேலும் மேலும்
விளங்குகின்ற பெருமையிது காரை நாட்டின்
இந் நிலையில் முருகர் தம் சரிதம் தன்னை
இத்துடனே முடிக்கின்றேன் இன்பமே என்றும்
இந் நிலையில் புராணமிது முடியும் வேளை
இந் நானிலமும் வாழ்கவென வாழ்த்தி நிற்போம்.

10. திண்ணமாபுரத்த அரசடி தன்னில்
திருவுடை வயிரவர் சூலத்தின் வடிவை
மன்னவர் வணங்கிட நாட்டிய பெருமை
மாநிலம் தன்னில் ஆண்டியர்க்காமோ
எண்ணியே முயன்றேன் முடிவேதும் காணேன்
இலங்கிடு சூலத்தின் தெய்வீக அருளை
கண்ணுதலான் கருணையால் தானும்
கருணையாய் அமைத்தவர் ஆண்டியார் தாமே

11. ஆண்டியார் காலத்தின் சற்று முன்னே
அன்பரெவர் சமைத்தாரோ முடிவேதும் இல்லை
வேண்டியே விளம்புகின்றேன் தெய்வீக அருளை
விளங்கிடச் செய்தவர் ஆண்டியாம் முனியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. ஆண்டியர் தானோ வேறோர் அன்பர்கள் தானோ
வேண்டிடா முயற்சி ஈதாம் விளங்கிட சான்று காணோம்
வேண்டிய அருளை ஏற்று விளங்கிடச் செய்த
ஆண்டியின் பணியே போற்றி ஏற்றிய ஒளியே போற்றி

13. ஆண்டியார் சூலத்தை வழிபடும் போதும்
ஆடுகள் மேய்த்திடு தொழிலினை செய்தும்
வேண்டியவாறு பாலினைப் பெய்தும்
விளங்கிடு கலத்தினில் பொங்கல்கள் செய்தும்
ஈண்டிய அரசின் கீழ் படையலைப் பரவி
இன்புடன் சூலத்தை வேண்டியே வணங்கி
ஆண்டியும் அரசரும் இன்புறு அன்பே
அருளது பொலிந்திட விளங்கிடு பதியே

14. பொங்கல்கள் பரவி பூசனை செய்து
பொலிந்திடக் கைகளைக் கூப்பியே நின்று
மங்கலமாகத் திருமுறை ஓதி
மாண்புடன் தானும் இறைபணி புரிவன்
அங்கங்கன் யாவும் அருளது ஈர்க்க
அன்பர்கள் தானும் இறைவனை நோக்க
பொங்கிடும் அருள் வெள்ளம் எங்கணும் பாய
பொலிந்தது பொலிந்தது காரையாம் நாடே

## ஆண்டியார் அமரத்துவச் சுருக்கம்

1. ஐயனார் வழிபாட்டைத் தொடக்கி வைத்து
அன்பருளம் பக்தியினில் மூழ்கி நிற்க
பையவே இறைனுடன் கலந்த செய்தி
பாரினில் யாருக்கும் தெரியாதேனோ.

2. தெரியாத தென்று சொல்ல முடியாதென்றும்
தீவினையால் இருள் மலமே முடிநிற்க
கரியதனில் ஏறுகின்ற கடவுள் பாதம்
கணப் பொழுதில் சென்றடைந்தான் உலகம் வாழ

3. சாத்திரம் எதனையும் தெரியாத ஆண்டி
சர்வமும் இறையெனக் கொண்ட நன்மேலோன்
பாத்திரமானவன் ஐயனார் அருட்(க்)கே
பாரினில் உண்மையாம் எளிமைசால் சித்தனே



4. சித்தர் போலும் இவன் செய்த பூசைகள்
சிரிக்க வைக்கும் சிலருக்குப் புதுமை போலும்
பத்தியதால் ஆட்டின் பால் பொங்கல் தன்னை
பரந்தமர் அரசிலையி(ல்) நிவேதம் செய்வர்.

5. ஆயிரத்து எண்ணூற்று இருபத்தைந்தின் முன்னே
ஆண்டியவன் ஐயனிலே சமைந்து கொண்டார்
பாயிரமாய்க் கூறுகின்ற இச்செய்தி தானும்
பரவைனின் அருள் எனவே வாழ்த்தி நிற்போம்.

6. இத்தகைய பூசைகள் ஏற்றுக் கொண்டு
இறைவனே ஐயனொடு சிவானாய் நின்று
நித்தியமும் உலகதனின் அருளே பொங்க
நிர்மலனாய் ஆண்டியவன் ஒளியே கொண்டான்.

7. பேறெதும் வேண்டா மேலோன்
பெருமை சால் ஆண்டியாவான்
ஊறெதும் இல்லா வாழ்வை
உலகிற்கே அளித்த சான்றோன்.

8. இயற்கையை எய்தினான் என்ற நற் செய்தி
இறையருள் தன்னால் எட்டிய தில்லை
அயலவர் எவர்க்குமே தெரியாத வண்ணம்
அன்புடன் இறையொடு இரண்டறக் கலந்தான் (கலந்தனன்)

9. ஐயனார் தன்னின் அருளுடைய பெருமையால்
அருவமாய்க் கலந்தனன் அரசடி நீழலில்
மெய்யிது மாணிக்கவாசகர் இறுதி
மேதினி தன்னில் ஆண்டியும் கொண்டான்

10. அரசடி தன்னில் ஆண்டியும் கலந்து
ஆடலன் சந்நிதி எதிர்ப்புறம் அமைய
பரனவன் அருளினால் பாரது உய்ய
பதியது ஈழச் சிதம்பரம் பொலிய

11. எங்கு சென்றனன் என யாவரும திகைப்ப
இறையினில் மறைந்தனன் ஆண்டியார் எங்கோன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்கிடும் முருகரின் பெருநிலச் செல்வத்தை
பொதுமையாய் சிவனுக்கு அளித்திட வைத்தவன்

12. முருகரின் நிலத்தில் ஆண்டியின் கோயிலும்
முறுவலாய் இருவரின் பக்தியும் கலந்தே
அருளுடை ஈழச் சிதம்பரப் பணியாம்
அன்புடன்அருளிய இருவரும் வாழ்க

13. வாழ்க வாழ்க ஆண்டியும் முருகரும்
வையகம் தன்னில் இவர் பெயர் நிலைக்க
சூழ்க சூழ்க சைவமாம் பெரு நெறி
சுத்த நன்மார்க்கம் உலகினில் ஒளிவிட

14. ஐயனின் அருளால் பாடிய புராணம்
அவனருள் பெற்றுத் தேடிய செல்வம்
மெய்யிது ஆண்டியார் நன்றியின் கடனாய்
மேதினி தன்னில் பாடினான் யானும்

## ஐயனார் வாழ்த்தியச் சுருக்கம்

1. அரிகரபுதல்வா ஐயனே போற்றி
அன்பரின் உளமதில் நிறைந்தவா போற்றி
ஆண்டி கேணி ஐயனே போற்றி
வேண்டிடும் வரங்கள் அருள்வாய் போற்றி
விளக்கதற்கரிய வித்தகா போற்றி
குதிரை வாகனம் ஊர்ந்தாய் போற்றி
குஞ்சர வாகனக் கடவுள் போற்றி
செண்டாயுதம் கொண்டவா பொற்றி
சிவனார் அருளிய சிவனே போற்றி
சிந்தையில் என்றும் உறைவாய் போற்றி
பூரண பொற்கலை மணாளா போற்றி
பொற்புடன் எம்மைக் காப்பாய் போற்றி
உத்தமர் உளமதில் உறைவாய் போற்றி
உலகம் யாவையும் புரப்பாய் போற்றி
புரந்திடு பொருளே புனிதனே போற்றி
திருப்பிட ஊரில் திகழ்வாய் போற்றி
திருநீல ஆடை அணிந்தாய் போற்றி



நெற்றியில் நீறு தாங்கினை போற்றி
நித்தியம் எங்கட்கருளினை போற்றி
போற்றி போற்றி புராதன போற்றி
போற்றி போற்றி அரிகர ஓம் சிவ

## நூல் சமர்ப்பணம் வாழ்த்து

1. பொன்னம்பலக் கவி இவன்
புகன்ற இப் புராணம் தன்னை
மன்னிய உலகிவென்றும்
மறுவற்று விளங்க வேண்டி
நின்னுடையப் பாதம் தந்தேன்
நீ எனக்கருள வேண்டும்
மன்னுசீர் உலகம் வாழ்க
மாண்புறு தெய்வம் நீயே

2. போற்றி இப் புராணம் வாழ்க
புண்மையில் தொண்டர் வாழ்க
ஆற்றிடும் பணிகள் வாழ்க
அன்பர்கள் வாழ்க வாழ்க

ஆண்டியார் பெருவெளியில் கலந்தேயங்கு
அன்புடை வடிவமாய் தானெங்குமாக
ஈண்டிய ஐயனின் பதியின் கீழாகி
இன்புடனே அழியாவரம் தானே கொண்ட
வேண்டுகின்ற அடியார்க்கு அருளே ஈந்து
விளங்குகின்ற தெய்வீக ஒளியேயான
ஆண்டருளும் ஐயனவன் அருளேயான
அற்புதனே அரள் முனியே போற்றி போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாசகச் செழும் பொருள் சுருக்கம்

திருவாசகம் மணிவாசகப் பெருமானால் அருளிச் செய்யப்பட்ட தெய்வத் தமிழ்க் களஞ்சியம். சித்தாந்தத்தின் செழும் பொருள் யாவும் திருவாசகத்தின் உள்ளடக்கமாக உள்ளது. வேதாந்தம் இதற்கு விதிவிலக்கல்லவே.

இந்து சமயத்தின் பல்வேறு பிவிவுகளின் தத்துவங்கள் யாவும் செறிந்து காணப்படுகிறது. சைவத்தின் முடிந்த முடிவுகள் யாவும் இதன் முடிவான கருத்துக்களே.

உலகிலுள்ள சமயங்களின் பிரதான கருத்துக்கள் யாவும் ஆங்காங்கே காணப்படாமலில்லை. இறைவனை முழு நோக்காக கொள்ளாத சமயங்கள் பற்றி யாதும் கூறுதற்கில்லை.

பக்தி அன்பு சுவை இலக்கிய மேம்பாடு சமய தத்துவம் என்பவற்றை ஒருங்கே கொண்டிலங்கும் ஓர் இரத்தினக் களஞ்சியம் வரலாறு, புராணம், உலக இயல்பு, விஞ்ஞானம், வானவியல், அண்டவெளி என்பன யாவும் செறிந்துள்ள நூல் சைவத் தமிழ் மக்களின் ஓர் இன்பப் பெட்டகமே.

ஐம்பத்தொரு பதிகங்களையும் அறுநூற்றுஐம்பத்தாறு பாடல்களையும் கொண்டுள்ளது.

சிவபுராணம் நூலில் முதல் இடமும் முதன்மையான இடமும் பெற்று விளங்குகிறது. திருவாசகத்தில் இறைவனைப் பற்றிக்கூறுவது தெய்வீக அனுபவத்தினால் தான் அறிந்து கொள்ள முடியும் போலும்.

இறைவன் ஆன்மா மும்மலங்கள் யாவும் சித்தாந்த கருத்தின் உள்ளடக்கமாகும், சிவபுராணத்தில் இறை தத்துவங்களை ஆங்காங்கே புராணக் கதைகள் போல அடுத்தடுத்துக் காட்டுகிறார் பதி ஒன்று என்ற சித்தாந்த கருத்து நோக்கத் தக்கது. சிவஞானபோதம் முதற் சூத்திரத்தில் ''அந்தம் ஆதி'' என்றும் இரண்டாம் சூத்திரத்தில் ''அவையே தானாய்'' என்றும் இறைவனைப் பற்றிக் கூறுவது நோக்கத் தக்கது. சித்தாந்தம் கூறும் இறை தத்துவங்களை விளக்கப் புகின விரியும்.

''ஏகன் அநேகன் இறைவன்'' என்ற சிவபுராண வரிகள் சிவஞான போத வரிகளுடன் ஒத்துப் போதல் நோக்கத் தக்கது. சித்தாந்த நூல்களும் திருவாசகமும் கூறும் இறை பற்றிய கருத்து



ஒன்றே என்பது பெறப்பட்டாம் ''ஈசனடி போற்றி எந்தை அடி போற்றி'' என்ற திருவாசக வரி இறைவனும் ஆன்மாக்களுக்கு தந்தையுமான தலைவனையே குறிப்பிடும். ஆன்மாக்களின் செயற்பாட்டிற்கு இறைவனே காரணம் என்ற சித்தாந்த கருத்து இங்கு அமைவது நோக்கத் தக்கது. தந்தையே மகனின் தோற்றத்திற்கும் முன்னேற்றத்திற்கும் காரணமாக அமைகின்றான். அதே போல் ஆன்மாவின் பிறவிகட்கும் மலங்கெட்டு முன்னேற்றமடைவதற்கும் இறைவனே காரணம் என்பதாக இது சித்தாந்தத்தின் முடிவான கருத்துக்களுள் ஒன்றாகும் என்பது பெறப்பட்டது. இறைவன் மல மற்றவன் என்ற சித்தாந்த கருத்தை வலியுறுத்தத்தான் திருவாசத்தில் சிவபுராணத்தில் ''நிமலனடி போற்றி என்றார்.

''தரிக்கிலேன் காய வாழ்க்கை சங்கரா போற்றி'' என திருச்சதகத்தில் மாணிக்கவாசகர் இறைவனைப் போற்றுகிறார். இறைவனைப் பற்றிக் கூறப்புகுந்த உமாபதிசிவம் தனது திருவருட் பயனாம் திருப்பெரு நூலில் ''நலமிலன் நண்ணார்க்கும் நண்ணினர்க்கு நல்லன் சலமிலன் பேர் சங்கரன் என்கிறார்.

சங்கரன் என்பது சுகத்தைச் செய்பவன் என்பது பொருளாகும் ஆன்மாக்களுக்குச் சுகத்தைச் செய்பவன் இறைவனே என்ற கருத்தை சித்தாந்த சாத்திரம் போல் திருவாசகமும் எடுத்துக் காட்டும். இறைவன் மல மற்றவன் என்ற சித்தாந்த நூல்களின் கருத்தை நிலை நாட்டுவது போல் திருச் சதகத்தில் ''நின்மல போற்றி'' என எடுத்துக் காட்டுகிறார்.

மேலும் ஆன்மா பற்றி சிவஞான போதத்தில் மெய் கண்டார் மூன்றாம் சூததிரத்தில் பின்வருமாறு கூறுவர்.

''உளதில தென்றலின் எனதுடல் என்றலின் ஐம்புலன் ஒழுக்கம் அறிதலின் கண்படுவ உண்டி வனை இின்மையின் உணர்ந்த உணர்தலின் மாயாவியந்திர தனுவினுள் ஆன்மா''

இதற்கான சிவஞான முனிவர் அருளிய சிற்றுரையில் அமைந்துள்ள பொழிப்புரையில் ''எவற்றினையும் அன்று அன்று என விட்டு ஆன்மா இலதென நிற்பது உளதாகலின் அதுவே அவ்வான் மாவாம்'' என்கிறார். இதிலிருந்து ஆன்மாவானது உள தென்பது பெறப்பட்டது.

ஆன்மா உளதென்பதும் அநாதி என்பதுமான சைவ சித்தாந்தக் கருத்து சிவஞான போதச் சூத்திரத்தால் வலியுறுத்தப் பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஊன்பாவிய உடலைச் சுமந்து
அடவி மரமானேன்''

இவ்வுயிருண்ணிப் பத்து வரிகளிலிருந்து ஆன்மா என்பது உண்டு உடலானது ஆன்மாவுக்கு இறைவனால் அருளப் பட்டது என்பது திருவாசகத்தால் உணரப்படுகிறது.

பசு (ஆன்மா) உண்டு என்ற சைவ சித்தாந்தக் கருத்தை திருவாசகம் கொண்டிலங்குகிறது. என்பது இதன் மூலம் வெளிப்படை.

ஆன்மா பிறப்பு இறப்பு அற்ற அநாதி என்ற சைவ சித்தாந்தக் கருத்தை வலியுறுத்துவான போல

''மரணம் பிறப்பென்''

நிலையிரண்டின் மயக்கறுத்த'' என்ற திருக்கோத்தும்பி வரிகள் இவற்றை எடுத்துக் காட்டும்.

இறைவன், ஆன்மா, இருள், கன்மம், மாயை இரண்டுமாக ஆறு பொருட்கள் அநாதி என்பது உமாபதி சிவம் வலியுறுத்தும் சைவசித்தாந்தக் கருத்து. இக் கருத்தை மாணிக்கவாசகரும் ஆங்காங்கே சுட்டிக் காட்டுகிறார்.

திருச்சாங்க வரிகள் நோக்கத்தக்கன ''மும் மலங்கள் பாயும் கழுக்கடை காண்'' இங்கே மும்மலங்களாம். ஆணவம், கன்மம் மாயை பற்றிக் குறிப்பிடப்படுகிறது. எனவே சைவ சித்தாந்தத்தின் முடிவான செமும் பொருளை மாணிக்க வாசகப் பெருமான் வெளிப்படுத்தினார் என்பதாம் சித்தாந்த முடிவாகிய முத்தி நிலை பற்றியும் குறிப்பிடாமலில்லை.

''பந்தமும் வீடும் படைப்போன்'' என்கிறார். இது இறைவன் முத்தி அருளலைக் குறிக்கிறது.

''முத்தி நெறியறியாத மூக்கரொடு'' என்னும் அச்சோப்பதிக வரி மேலும் முத்திநிலையின் பெருமையை எடுத்துக் காட்டுவது போல அமைகிறது. இவையாவும் சைவசித்தாந்தம் திருவாசகத்தின் உள்ளடக்கமே என்பதைக் காட்டா நிற்கும்.

வேதாந்தக் கருத்தின் செறிவையும் திருவாசத்தில் காணலாம் போல்



''போற்றியப் புவன நீர்தீக காலோடு வான மானாய் போற்றி
யெவ்வுயிர்க்கும் தோற்றமாகி நீ தோற்றமில்லாய் போற்றி
யெல்லாவுயிர்க்கும் தோற்றமாகி நீ தோற்ற மில்லாய் போற்றி
யெல்லாவுயிர்க்கு மீறயீரின்மையானாய் போற்றி
யைம்புலன் களினைப் புணர்கிலாப் புணர்க்கை யானே''

இது திருச் சதகத்தில் உள்ளது இதன் பொருள் நோக்கத் தக்கது.

''இறைவனே நீர் முதலிய ஐம்பூதங்கள் யாவும் உன்னிடமே தோன்றுகின்றன. எல்லா உயிர்களும் உன்னிடமிருந்தே தோன்றுகின்றன. உனக்குத் தோற்றமே மாற்றமோ இல்லை எல்லா உயிர்களும் ஒடுங்குதல் அடைதல் என்பவற்றிற்கு இடமானாய் உனக்கு ஒடுங்குதல் அடைதல் என்பதில்லாதவனாய் ஐம்புலன் களும் உன்னை உணர்வதில்லை. அத்தகைய உணர் வுகள் உடையவனே வணக்கம்

வேதாந்த உபநிடதக் கருத்துக்களே இங்கு செறிந்துள்ளன. இறை என்று முளது ஆன்மா முதலிய யாவும் தோற்றமும் ஒடுக்கமும் உளது. எல்லாம் பரமத்திலிருந்தே இத்தகைய வேதாந்த உபநிடதக் கருத்துக்களும் செறிந்து விளங்குவதற்கு திருச் சதகத்தில் உள்ள இப் பாடல் ஓர் எடுத்துக் காட்டாகும்.

சைவத்தின் சித்தாந்தக் கருத்துடன் ஏனைய எமது சமய நெறிகளையும் கொண்டிலங்கும்

பிறவிப் பிணியை அறுப்பவனும் உயிர்களின் உள்ளத்தே நிறைந்தவனும் உயிர்களின் அஞ்ஞானத்தை போக்குபவனும் இறைவனே. எனத் திருவாசத்தில் காணக்கிடக்கிறது.

''பல்லுயிரெல்லாம் பயின்றவனாகி
என்னுடை இருளை யேறத் துரந்தும்''
இவ்வரிகள் யாவும் இதற்கு எடுத்துக் காட்டாகும்.

அன்பும், பக்தியும் செறிந்தது திருவாசகம். தத்துவப் பொருளானது திருவாசகம் கல் மனத்தினரையும் கசிந்துருக்க வல்லது இதனை மேற்கோள்களால் விளக்க வியலாது. அனுபவத்தினாலே தான் அறியத் தக்கது. திருவாசகத்தில் வரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார்த்தைகள் பக்தியை அன்பை வெளிப்படுத்துகிறது. பிடித்தபத்து வாழாப்பத்து கோயில் மூத்த திருப்பதிகம் முதலியன சைவத்தின் தத்துவங்களை ஆங்காங்கே வலியுறுத்துகிறது. வீடு பேறருளுதல் (முத்தி நிலை பற்றி குறிப்பிடுதல் நோக்கத் தக்கது.

''அந்தணனாயறை கூவி வீடருளும் அம் கருணை
வார் கழலே பாடுதுங்காண் அம்மானாய்
என்னும் வரிகள் இதனை வலியுறுத்தல் நோக்கற்பாலது.

ஆன்மாக்களை ஆட் கொள்பவன் இறைவனே என்பதை எடுத்துக் காட்டுவது போல் ''ஏழையடியோமை ஆண்டு கொண்ட'' என்ற திருப்பொற் சுண்ண வரிகள் அமைகின்றன.

இறைவனே எல்லாமாக இருக்கின்றான் என்பதனை
''வேதமும் வேள்வியுமாயினார்க்கு மெய்மையு பொய்மையு
மாயினார்க்குச் சோதியுமாயிருளாயினார்க்குத் துன்பமுமாயின்ப
மாயினார்கக்குப் பாதியுமாய்முற்று மாயினார்க்குப் பந்தமுமாய் வீடு
மாயினார்க்குக் காதியு மந்தமுமாயினாருக் காடற் பொற்
சுண்ணமிடித்து நாமே''
என்னும் திருப் பொற் சுண்ணப் பாடல் நிலை நிறுத்துகிறது.

''அன்பே சிவமாவது'' என்ற திருமூலர் கருத்து ஆகமத்தின் சாரமே அன்பு தான் இறைவனைக் காட்டும் இறை பதம் தரும்.

''அன்பினாலடியேன்னாவியோடாக்கை யானந்த மாய்க்
கசிந்துருக வென்பர மல்லா வின்னருடந்தாய்''
என்னும் வரிகள் அன்பின் பெருமையை அன்பினால் இறையருள் பெறலாம் என்பதையும் எடுத்துக்காட்டுகிறது திருவாசகம் என்பது மறை பொருள் சைவம் ஆகமத்தின் வழி வந்ததேயாம்.

நான்கு வேதமும் பொது நூல் என்பர் நான்கு வேதமும் (இருக்கு, யசுர், சாமம், அதர்வம்) இறைவனைப் பற்றிக் கூறுதல் தென்னாட்டுச் சைவர்கட்குப் போதுமானதாக இல்லை என்பதை வலியுறுத்துகிறார். இதனைத் தான் ''வேத நான்கு மோலமிட்டு ணங்கு நின்னையெய்தலுற்று'' என்னும் வரிகள் சான்றாக அமைகின்றது.

வேதத்தினால் சொல்லி அளவிட முடியாதவன் இறைவன் என்பதனை ''வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும் ஓத உதவா ஒரு தோழன்'' என்னும் திருவெம்பாவை வரிகள் எடுத்துக் காட்டுகின்றன.



வேதப் பொருளாவான் இறைவன் ''மறையுமாமறையின் பொருளுமாய் வந்து'' என்னும் வரிகள் எடுத்துக் காட்டாக அமைகின்றன என்பதாம்.

''சிவாய நம'' என்னும் திருவைந்தெழுத்து சிவத்தையும் அருளலையும், உயிரையும், மறைப்புச் சக்தியையும், மலத்தையும் குறிப்பதாம். இத்தகைய திருவைந்தெழுத்தையே என்றும் மனதகத்தில் கொண்டு இறை இன்பத்தில் திளைத்தவர் மாணிக்க வாசகர் திருவாசகத்தில் மூன்று இடங்களில் எடுத்துக் காட்டுகிறார். திருவாசகம் திருவைந்தெழுத்திருந்தே ஆரம்பிக்கின்றது. திருவைந்தெழுத்தை இடையறாது எண்ணித் தியானித்து பெரின்பம் எய்தியவர் மாணிக்க வாசகர்.

''நானேயோ தவம் செய்தேன் சிவாய நம எனப் பெற்றேன்
தேனாய் இன்னமுதமாய்த்தித்திக்கும் சிவபெருமான்
தானேவந்து எனதுள்ளம் புகுந்து அடியேற் கருள் செய்தான்
ஊனாரு முயிர் வாழ்க்கை யொறுத் தன்றே வெறுத்திடவே''

என தேனினும் இனிமையாக பாடியருளுகின்றார்.

திருவைந்தெழுததின் மூலம் இறைவன் ஆன்மா, உயிர் என்பவற்றின் தொடர்பு அறியப்படுகிறது. உயிர் உலகிற்குத் தந்தை இறைவனே இவ்வுடலும் இறைவனதே உலகும் அவனுடையதே ஐந்தொழில் புரியும் அம்பலவனே யாவற்றிற்கும் கர்த்தா. எனவே ஆம்னாவினுடையது ஒன்றுமில்லை. இது சித்தாந்த சாத்திரங்களின் சாராம்சமே. இதனை மனதகத்தே தெளிந்து பக்திக் கனி சொட்ட பல்வேறு பாடல்களில் பாடி மகிழ்ந்தவர் மாணிக்கவாசகர், உடையவனாகவும், அப்பனாகவும் கூறுதல் நோக்கத் தக்கது.

''உடையாய் என்னைக் கண்டு கொள்ளே''
''உடையாய் அடியேன்''
''எந்தையாயெம் பிரான்''
''எள்ளு மெண்ணையும் போனின்ற எந்தையே''
''எந்தை பெருமான்''

''உடைபோனே நின்தனை உள்கி உள்ளம் உருகும்
பெருங்காதல் உடையார் உடையாய் நின் பாதம்''
''எந்தாய் அந்தோ''
மேயான வேதியனை மாதிருக்கும் பாதியனை
நாயான நந்தம்மையாட் கொண்ட நாயகனைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ் வரிகள் யாவும் உலகிற்குத் தந்தை இறைவனென்பதையும் இவையாவும் அவனுக்கே உடமை. அவனே உடையவன் என்பதையும் எடுத்துக் காட்டுவன வாகும்.

திருவாசகம் பக்திக் கோர் எடுத்துக் காட்டு திருவாசகத்தின் ஒவ்வொரு பாடலும் ஓர் பக்திக் களஞ்சியமே அதனை சொல்லால் வர்ணிக்கவோ விளக்கவோ முடியாது திருவாசகத்தை ஓதி உணர்வதால் அனுபவத்தின் மூலம் தெளிதல் உணர்தல் முடியும் மாணிக்க வாசகர் கண்ட பக்தியில் ஆசை அன்பு யாவும் உள்ளுக்குள்ளே பின்னிப் பிணைந்து கிடக்கிறது.

கோயில் மூத்த திருப்பதிகம், கோயிற் திருப்பதிகம் என்னும் இரு பதிகங்களும் பக்தி அன்பின் உச்ச நிலைக்கு எடுத்துக் காட்டாகும்.

''உடையாளுன்றனடுவருக்கு முடியாணடுவுணீயிருத்தினடியே
னடுவுளிரு வீருமிருப்பதானாலடியேனுன் னடியார் நடுவுளிருக்கும்
மருளைப் புரியாய் பொன்னப் பலத்தெம் முடியா முதலே என்
கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே"

''ஏசா நிற்பர் என்னை உனக்கு அடியானென்று பிற
ரெல்லாம் பேசா நிற்பர். யான் தானும் போணா நிற்பேன் நின்
அருளே தேசா நேசர் சூழ்ந்திருக்கும் திரு வோலக்கம் சேவிக்க
ஈசா பொன் அம்பலத்தாடும் எந்தாய் இனித்தான் இரங்காயோ"

கோயில் மூத்த திருப்பதிகத்தில் வரும் இப் பாடல்கள் இரண்டும பக்திக்கு பக்தியின் உச்ச நிலைக்கு ஓர் கண்ணாடி கோயில் திருப்பதிகத்தின் சில வரிகள் எடுத் தோதுதலின் மூலம் பக்தி வலையின் உச்ச நிலையை எய்தலாம்.

''குணங்கள் தாமில்லா இன்பமே"
''யெந்தையே ஈசாவுடலிடம் கொண்டாய்"
''அன்பினாலடியே னாவியோ டாக்கை
யானந்த மாய்க் கசிந்துருக"

திருவாசகம் முழுவதும் மாணிக்கவாசகர் தம் வாழ்க்கை அனுபவத்தில் கண்ட பக்திப் பரவசமே,

வெதங்கள், உபநிடதங்கள் கூறும்பொருளின் உள்ளடக்கம் திருவாசகத்தின் சாராம்சம் என்பதில் தவறில்லை.

"ஓயாதே யுள்கு வாருள்ளிருக்கு முள்ளா னைச்
சேயானைச் சேவகனைத் தென்னன் பெருந்துறையின்



தாயான தத்துவனைத் தானேயுல கேழு
மாயானை யாள்வானைப் பாடுதுங்காணம்மானாய்"

என்பது தீருவெம்மானையிலுள்ள ஓர் பாடலாகும் அதன் உட் பொருள் நோக்கத் தக்கது.

ஓய்வின்றி நினைப்பவர் தம் உள்ளத்தின் மெய்ப் பொருளாய் விளங்குபவனை, தூரத்திலுமானவனை உயிர்களுக் கெல்லா ஊழியனாய் நின்று உதவுபவனை தென்னவனை (தென் படுகின்றவன் என்பதும் பொருந்தும்) யாவருக்கும் மேலானவனை வேதப் பொருளானவனை உமாதேவியைப் பாதிப்பாகமாய்க் கொண்டவனை நாய் போலும் எங்களை ஆட்கொண்டருளும் தலைவனை ஆன்மாக்களுக்கெல்லாம் தாய் போலும் தத்துவப் பொருளானவனை ஏழுலகமும் ஆனவனைப் பாடுவோமாக" என்பதுமாக

சுவாமி சித்பவானந்தர் தம் உரையில் ரிக்வேத சம்கிதையிலுள்ள ஓர் மந்திரத்தை இப் பாடலுக்கு எடுத்துக் காட்டாகக் கூறுவது நோக்கத் தக்கது.

''ஓம் பூ: புவ : ஸ்வ
ஓம் தத் ஸவிதுர் வரேன்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி!
தியோ யோ ந: பிரசோதாயாத்!,

பூலோகம் முதலான மூன்றுலகமுமான நம் ஒளியைத் தூண்டுகின்ற அந்த சுடரை (சுடர் கடவுள்) கடவுளின் ஒளியைத் தியானிப்போமாக."

இக் காயத்திரி மந்திரம் எல்லாம் மூர்த்தி கட்கும் பொதுவானதாகும் என்பர். இதனைப் பிரம காயத்திரி என்பர் இக் காயத்திரி மந்திரத்தை ஓதி உணர்வதால் உயிரும் உலகும் ஒளியும் நன்மையும் பெற்றுய்யும் எனப் பலரும் தற்போது கூறி வருவது நோக்கத்தக்கது.

இப் பாடலையும் காயத்திரி மந்திரத்தையும் ஒப்பு நோக்கி சுவாமி சித்பவானந்தர் கூறுவது வருமாறு

''இக் காயத்ரீ மந்திரமும் இந்தத் திருப்பாடலும் ஒன்றை யொன்று ஒத்திருந்து சாதனத்துக்குப் பெருங் கருவிகளாகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த இரண்டு மந்திரங்களையும் முறையே பயன்படுத்ததுவது சாலச் சிறந்தது" என்பதாம்

மாணிக்க வாசகர் வேதம் உபநிடதம் யாவற்றையும் கற்றோ கல்லாமலோ அறிந்துள்ளார். ஞானமார்க்கத்தவர் மாணிக்கவாசகர் அவர் உள்ளத்தில் இவையாவும் சுடர் விட்டெரியத் தானே செய்யும் என்பதாம். காயத்திரி மந்திரத்தை ஓதுதல் சிறந்தது. அதனைத் தமிழில் தந்தவர் மாணிக்கவாசகனார். என்பதில் தவறில்லை திருவாசகத்தில் இல்லாதது என்பதற்கு இடமில்லை எனலாம்.

சித்தாந்தத்தில் வரும் கருத்துக்களின் முடிவுக்கும் ஏற்படும் வினாக்களுக்கும் திருவாசகமே விடை பகருகின்றது. எனலாம். ஆன்மா, சத்தா, அசத்தா, சதசத்தா, என்பதனை இலகுவில் அறிந்து கொள்ள முடியாது இதற்கான விடைகளை திருவாசகமே கூறும்.

''வான நாடரும் அறியொணாத நீ
மறையிலீறு முன்றொடரொணாத நீ
யேனை நாடரும் தெரியொணாத நீ
யென்னை யின்னி தாயாண்டு கொண்டவா
ஊனை நாடக மாடுவித்தவா
வுருகி நானுனைப் பருக வைத்தவா
ஞான நாடக மாடு வித்தவா
நைய வையகத் துடைய வச்சையே"

இதன் சாராம்சம் நோக்கத் தக்கது, வானவரும் இறைவனை அறிய மாட்டாகள் வேதத்தின் முடிந்த கருத்தக்களும் இறையை விளக்க மாடடா. ஏனைய ஆன்மாக்களும் அறிய மாட்டா உடலைத் தந்து (மணிவாசகரை) ஆட்கொண்டவர். உள்ளமானது உருகி (மணிவாசகருக்கு) இறையின்பத்தை செய்தவர் மணிவாசகருக்கு உலக இச்சையை நீங்கச் செய்தவரும் இறைவனேயாம்.

இதிலிருந்து ஆன்மா இறையருளினாலே தான் தெய்வ இன்பத்தைப் பெறுதலும் பாசங்களினின்றும் நீங்குதலும் முடியுமாம். என்பதாகும். ஆன்மா தெய்வ உணர்வின்றி தன் இச்சைப்படி தெய்வ ஞானத்தை உணர முடியாதென்பதாம். இதிலிருந்து ஆன்மா அசத்தல்ல. சத்து என்பதை அனுபவ உணர்வினால் தான் அறிய



முடியும் ஆனால் தெய்வீக ஞான உணர்வை இறைவனே தான் தந்து ஆட் கொள்ள முடியும் என்பது மாணிக்க வாசகரின் கருத்தாக அமைகின்றது. எனலாம். திருச் சதகத்தின் நூறாவது பாடலில் இறை பதத்தை தருமாறு வேண்டுகின்றார்.

''...........அம்பலத்து ஆடும் நின் கழல் போது நாயனேன் கூட வேண்டும்...................." என்கிறார்.

இதனையே சைவர்கள் முத்தியின்பம் இறையின்பம் என்கிறார்கள். சிதம்பரத்தில் ஆன்மா இறையுடன் சேர்கிறது என்கிறார் போலும் சிதம்பரம் என்பது பெரு வெளியேயாம் இது இறைவன் எங்குமுள்ளான் என்பதை எடுத்துக் காட்டுவதாம். ஆன்மா இறைவனுடன் கலத்தல் என்ற கருத்தும் கொள்ளத் தக்கது. சிதம்பரத்தலமே மாணிக்கவாசகரின் ஞான ஈடேற்றத்திற்கு உறுதுணை என்பதாம்.

இறைவனின் தத்துவத்தை சமய வாழ்க்கைக்கு ஆன்ம வாழ்க்கைக்கு உகந்ததாகத் திருச் சாழலில் மாணிக்க வாசகர் எடுத்து காட்டுகிறார்.

''ஈசனவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான்" என்பதைப் ''பூசுவதும வெண்ணீறு " என்பதன் மூலம் எடுத்துக் காட்டுகிறார் சாம்பல் (நீறு) மாற்றம் அடையாது அதனை அணிவதன் மூலம் இறைவனும் மாற்றமடையாதவனே என்பதாம்.

தேவாரக் கருத்துக்களைக் கூட தன்னகத்தே கொண்டிலங்குவது திருவாசகமே, திருச்சதகப் பாடலென்று திருநாவுக்கரசரின் திருத்தாண்டகப் பாடலொன்றுடன் ஒப்பு நோக்கத் தக்கது.

''வண்ண ந்தான் சேயது அன்று வெளிதே அன்று அநேகன் எகன் அணுஅணுவில் இறந்தாய் என்று அங்கு எண்ணந்தான் தடுமாறி இமையோர் கூட்டம் எய்தும் ஆறு அறியாத எந்தாய்"

இதன் பொருளாவது:-

''நிறத்தால் செந்நிறமுமல்ல வெண்ணிறமுமல்ல அநேகன் என்றும் ஒருவன் என்றும் அறுவடிவினனா அளவினும் சிறியவனா அல்லது பெரு வளவினனா எனத் தேவர்கள் எண்ணத்தால் தடுமாற்ற முற்றாலும் என்றவாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இப்படியன் இந் நிறத்தான் இவ் வண்ணந்தன்
இவன் இறைவன் என்றெழுதிக் காட்டொணாதே"
என்பது திருநாவுக்கரசரின் திருத் தாண்டக வரிகளாகும்.

இறைவன் இவ்வடிவினன் இந் நிறத்தவன் என எவரும் கருதுதல் முடியாதென்பது இருவரின் ஒருமித்த கருத்தாகும்.

''தாயினும் நல்ல தலைவர்" எனத் தேவாரம் கூறும் இதே கருத்தைத் தான் மாணிக்க வாசகர்

''தாயிற் பெரிதும் தயாவுடைய தம் பெருமான் எனத் திருப் பூவல்லியில் கூறா நிற்பர்.

இறைவனே ஆன்மாக்களுக்குத் திருவடித் தீட்சை செய்கின்றார் என்ற கருத்தைத் தான்

''சீரார் திருவடி என்தலைமேல் வைத்த பிரான்" என்ற திருப்பூ வல்லி வரிகள் ஞாபகப்படுத்தும்.

இறை வழிபாட்டில் பல்வேறு விளையாட்டுக்களைக் கருத்திலே நிறுத்தி அதனுடாக தெய்வ பக்தியை மனதிலே நிலைபெறச் செய்கின்றார்.

''பூவல்லி" என்பது தோழியரோடு சேர்ந்து பூக் கொய்யும் ஒரு வகை விளையாட்டாம். அக் காலத்தில் விளையாட:டு மூலம் கற்றல் இக் கால உளவியல் முறைகளை அக் காலத்திலேயே மாணிக்க வாசகர் அறிந்திருந்தாரோ என்னவோ திருவாசகத்தில் திருப்பூவல்லி முதலியவற்றை அமைத்துள்ளமை.

இறைவனின் வடிவங்களைப் பல இடங்களில் எடுத்துக் காட்டுகின்றார். சிவனை விட்டுச் சக்தியானது பிரியா தென்பது கோட்பாடு போலும் இதனைத் தான் திருக் கோத்தும்பியில் பெருமான் எடுத்தியம்புகிறார்.

''தோலும் துகிலும் குழையும் சுருள் தோடும்
பால் வெள்ளை நீறும் பசுஞ் சாந்தும் பைங்கிளியுஞ்
சூலமுத் தொக்க வளையும் உடைத் தொன்மை
கோலமே நோக்கிக் குளிர்ந்து ஊதாய் கோத்தும்பி"



இப் பாடலில் இறைவனின் அர்த்த நாரீஸ்வ வடிவம் எடுத்துக் காட்டப்படுகிறது.

பொய்ச் சமய நெறிகளாலும் வாழ்க்கைக்கு ஒவ்வாத சாஸ்திரங்களாலும் மனிதனின் வாழ்வு ஆத்மா குழப்படைந்து துயர்வடையும் என்ற கருத்தைத் தான்

''உவலைச் சமயங்கள் ஒவ்வாத சாத்திரமாம்
கவலைக் கடலுளனாய்க் கிடந்து தடுமாறும்"
என்ற திருக்கோத்தும்பி வரிகள் எடுத்துக் காட்டுகின்றன.

மாணிக்க வாசகரைப் போல் எந்த மத தாபகரும் இறை அடியவரும் சமய வாதியும் தெய்வ நம்பிக்கை, உடையவராக இருக்க முடியாது சைவ சமயத்தவர் சிவனை வழிபடுவர் மாணிக்கவாசகர் காலத்திலே தமிழகத்திலே சைவ வைணவச் சச்சரவுகளும் இருக்காமலில்லை. சமய பேதங் கடந்து இறை அருள் என்பதைக் கண்டவர் இவரேயாம் என்றும் வேறு யாரும் இல்லை எனவும் கூறி விடுதல் முடியாது இதைத் `தான் திருவண்டப் பகுதியில்

''அறுவகைச் சமயத் தவறுவகை யோர்க்கு வீடு பேறாய்" வருகின்ற இவ் வரிகள் எடுத்துக் காட்டுகின்றன. சமயங்கள் இறைவழிபாட்டிற்கு மனித ஆன்ம நேயத்திற்கும் ஆத்மீக முன்னேற்றத்திற்கும் வழி வகுப்பன. இதைத்தான் மாணிக்கவாசகரும் கருதுவர் போலும். ஏட்டுக் கல்வியால் மட்டும் இறையுணர்வு ஏற்படாது என்பதைக் காட்டத்தான்

''நூலுணர்வு உணரா நுண்ணியோன் காண்க" என்ற திருவண்டப் பகுதி வரி எடுத்துக் காட்டும்.

இறை நம்பிக்கையில்லாது கடுந்தவம்புரிந்தவர் இறையருளுக்கு பாத்திரமாக மாட்டார்கள் என்பதைத் தான் மாணிக்கவாசகரும் இறை நம்பிக்கை இல்லாத சமய வாழ்வு , வழிபாடு கானல் நீர் போன்றதாம்"

இதனைத்தான் மாணிக்கவாசகரும்
''இருமுச் சமயத்து ஒரு பேய்த் தேரினை
நீர் நசை தரவரும் நெடுழங்கண் மான்
தவப்பெரும் வாயிடைப் பருகித் தளர்வொடும்
அவப் பெருந் தாபம் நீங்கா தசைந்தன"
என்பதாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐம்பூதங்கட்கும் காலானவன் இறைவனேயாம் ''விண் முதற் பூதம் வெளிப்ட வகுத்தோன்'' என்பது இதனை வலியுறுத் தாமலில்லை.

இறைவனை கடுந்தவம் புரியினும் காணுதலும் உணர்தலும் அபூர்வமே. மறை முதலாகிய அறிவினால் இறைவனைக் காண முற்படினும் முடியாதென்பதாம் இவற்றை எல்லாம் அறிந்தே ஆங்காங்கே சமைத்திருக்கிறார். தந்திரங்களாலும் இறைவனைக் காணுதல் முடியாதாம்.

''உற்றவர் வருந்த உரைப்பவர்க் கொளித்தும்''
''மறைத் திறம் நோக்கி வருந்திரைக் கொளித்தும்
''இத் தந்திரத்தில் காண்டும் என்றும் இருந்தோர்க்கு
அத் தந்திரத்தில் அவ்வயின் ஒளித்தும்'' என்பதாம்.

உடலை வருத்தியோ ஞான அறிவினாலோ, உபாயங்களினாலோ இறைவனைக் காண முடியாதென்பதாம். மேலும் தொடர்ந்து வரும் திருவாசக வரிகள் பல வருடங்கள் உணர்விலாத் தவங்களினாலும் அட்ட மாசித்திதிகளாலும் இறைவனை அறிந்து கொள்ளுதல் உணர்ந்து கொள்ளுதல் முடியாதாம். என்பதை உணர்த்தும்.

உயிர் உலகங்களின் தோற்றத்திற்கும் ஒடுக்கத்திற்கும் இறைவனே காரணமாக அமைகின்றான். இதனை திருவெம் பாவையில்

''போற்றி எல்லா உயிர்க்கும் ஈறாம் ஈடிணையடிகள்''
என்னும் வரிகள் கூறா நிற்கும்.

இறைவன் ஒருவன் தான் அவனுக்கு ஒரு விதமான வடிவமில்லை. இத்தகைய இறைவனை ஆயிரக் கணக்கான திருப்பெயர்களால் வழிபடுகின்றோம். இதிலிருந்த சைவர்கள் பல தெய்வ வணக்கமுடயவர் எனக் குறைவாகக் கருதுதல் முடியாது. எனப் பிற மதத் தவற்குக் காரணத்துடன் எடுத்தியம்புதல் நோக்கத் தக்கது.

இதனைத் தான்

''ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்று இல்லார்க்கு ஆயிரம் திருநாமம் பாடி................. என்கிறார்.



மாணிக்கவாசகர் வரலாற்றில் தான்செய்த அற்புதங்களை திருவாசத்தில் ஆங்காங்கே அமைத்தள்ளார்.

''நரிகளை எல்லாம் பெருங் குதிரை ஆக்கியவாறு''
''நரியை குதிரைப் பரியாக்கி ஞானமெல்லாம் நிகழ்வித்து''
எனும் வரிகள் எடுத்துக் காட்டும்.

சிவாகமங்களைத் தோற்றுவித்தவர் இறைவனே என மாணிக்க வாசகர் எடுத்துக் காட்டுகிறார். வேதத்தை விட சிறப்புடையது ஆகமம் போலும் வேதங்களானது காலங் காலமாக முனிவர்களின் வார்த்தைகளின் தொகுப்பேயாம், வேதத்தை விடச் சிறந்த தத்துவம் ஆகமத்தின் கண்ணே உள எனச் சிலர் கூறுவதற்கு உண்மையுண்டு தானே இதனைத் தான்

''மன்னு மாமலை மகேந்திர மதனில் சொன்ன ஆகமம் தோற்றுவித்தருளியும்'' என்பர்

ஆகமத்தை இறைவன் அருளிச் செய்யவில்லை தோற்றுவித்தார் என்பதாம்.

வானவியலிலும் மாணிக்கவாசகர் மேலான அறிவுடையவர் அண்டவெளி ஆராயும் சிறப்பு பெற்றவர். அண்டவெளியில் சிறிய கல்லளவு முதலாக சூரியர் வரை நூற்றொரு கோடிக்கு மேல் கோள வடிவில் பவனி வருகின்றதென்பதை அன்றே எடுத்துக் கூறியுள்ளார்.

இதனைத் தானே
''அண்டப் பகுதியில் னுண்டைப் பிறக்கும்
அளப் பரும் தன்மை வளப் பெரும் சுளட்சி
ஒன்றனுக் கொன்று நின் றொழில் பகரின்
நூற்றொரு கோடியில் மேற்பட விரிந்தன''
என்கிறார்.

மேலும் இயற்கை நியதிகளையும் ஆங்காங்கே எடுத்துக் காட்டுகிறார். சூரிய சந்திரரின்இயல்பு தீயின் தன்மை ஆகாய வியாபகம் காற்றின் அசைவு யாவற்றையுமே அறிந்து திருவாசத்தில் அமைத்தவர் மாணிக்க வாசகர். அது மட்டுமன்றி உயிர்களின் பிறப்பு முதலியவற்றை எடுத்துக் காட்டுகிறார்.

''மானுடப் பிறப்பினுள் மாதா உதரத்து
ஈனம் இல் கிருமிச் செருவினில் பிழைத்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தக்க தசமொடு தாயொகி தான் படுந்
துக்க சாகரத்து தரியிடைப் பிழைத்தும்''

என எடுத்துக் காட்டுகிறார். இவை மாணிக்க வாசகர் ஓர் மகப் பேற்று வைத்தியரா என எண்ண வைக்கிறது.

தொடர்ந்தும் உலக வாழ்வ பற்றியும் எடுத்தியம்புகின்றார் கூறப் புகின் விரியும் எனினும்

''மத்தக் களிறெனும் அவாவிடைப் பிழைத்தும்
கல்வி என்னும் பல் கடற் பிழைத்தும்

என்னும் வரிகள் இவற்றிற்கு ஓர் எடுத்துக் காட்டு.

சமய வாதிகள் உண்மையை உணராதவர் தாங்கள் சொன்னதே சரி என்பர் இறுதியில் அவர்கட்கும் அலைவுதான் ஏற்படும. இவ்வுண்மையை அறிந்தவர் மாணிக்க வாசகர் இதனால் தான்

''சமய வாதிகள் தத்தம் மதங்களில் அமைவதாக அரற்றி மலைந்தனர் என்கிறார்.

மாணிக்கவாசகர் தம் வாழ்நாளெல்லாம் இறை தத்துவத்தில் திகழ்ந்தவர். பக்திக் கடலில் மூழ்கியவர் ஆண்டவனின் அமுதத் தேனைப் பருகியவர். சமய பேதங்கடந்து இறை அருளில் துலங்கியவர். இத்தகைய மணிவாசகப் பெருமான் தந்த திருவாசகம் எம் போலும் மக்களால் கற்று அறிந்து தெளிதல் முடியாதென்று. எனினும் ''ஆசை பற்றி அறையலுற்றேன்'' என்பது கம்ப நாடாழ்வார் வார்த்தை அவ்வாசையால் உந்தப்பட்டு நாமும் தெளியப் புகுதல் தவறல்ல.

''செங்கமலப் பொற்பாதம் தந்தருளும் சேவகனை வாழத்தி வணங்கி அமைவோமாக''

''அருளா தொழிந்தால் அடியேனை
அஞ்சேல் என்பார் ஆர் இங்கு
பொருளா என்னைப் புகுந் தாண்ட
கொன்னே கொன்னம்பலக் கூத்தா
மருளார் மனத்தோடுனைப் பிரிந்து
வருந்து வேனை வாவென்றுன்
தெருளார் கூட்டம் காட்டாயேற்
செத்தே போனாற் சிரியாரோ''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணனி அச்சுப் பதிப்பு

துயா அச்சகம்

கொம்பியூட்டர் ஓவ்பிசெற் பிறின்டேர்ஸ்

138, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

T.P. 021 - 222 2881

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஒப்பம் செய்யப்படாத ஈழத்து சிதம்பரம்
பூரணை பொற்கலை சமேத ஐயனார்
எழுந்தருளும் திருக்கோலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org